
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஆனி
ஜூன் — 1978



விலை 85 காசு

ஸ்ரீராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர் :: சென்னை-600 004.

ஆசிரியர் ‘அண்ணா’ உரை எழுதிய எங்கள் நூல்கள்

நாகரத்திலும் தமிழிலும் மூலமும் பதவுரை பொழிப்புரைகளும்
விளக்க உரையும் குறிப்புகளும் உள்ளன

I. உபநிஷதங்கள்	ரூ.	பை
ஈச-கேன-கட உபநிஷதங்கள்	3	00
காலிகோ	5	00
ப்ரச்ன-முண்டக-மாண்டுக்ய-ஐதரேய உபநிஷதங்கள் (பக்கம் 172)	1	75
காலிகோ	2	50
தைத்திரீய உபநிஷத்து (பக்கம் 91)	1	50
காலிகோ	2	50
சாந்தோக்ய-ப்ருஹதாரண்யக உபநிஷத்துகளின் ஸாரம், ப்ரஹ்மஸூத்ரத்துடன் (மூன்ருவது பதிப்பு) பக்கம் 320	6	00
காலிகோ	9	00
மஹாநாராயண உபநிஷத்து (தைத்திரீய நாராயணவல்லி) பக்கம் 146	3	00
II. பகவத்கீதை		
ஸ்ரீமத் பகவத்கீதை	8	00
காலிகோ	9	50
ஸ்ரீமத் பகவத்கீதை (பாராயணம்)	4	00
ஸ்ரீமத் பகவத்கீதை மூலம் (தமிழ்) பாக்கட் சைஸ்	2	00
ஸ்ரீமத் பகவத்கீதை வெண்பா (முத்து ஐயர் இயற்றியது)	2	00
III. வேதாந்த ப்ரகரணம்		
விவேகசூடாமணி (பக்கம் 392+XII)	4	25
காலிகோ	5	50
IV. வேதநூல்களும் பிரயோகங்களும்		
ஸ்ரீருத்ரம்-சமகம் (மஹாந்யாஸத்துடன்-பக்கம் 296)	4	00
காலிகோ	5	00
தைத்திரீய மந்த்ரகோசம் :—		
தமிழில் ஸ்வரத்துடன்	6	00
நாகரத்தில் ஸ்வரத்துடன் முதல்பாகம்	2	50
ஷை இரண்டாம் பாகம்	3	00
ஸ்ரீதேவீமாஹாத்மியம்	9	00
ஸ்ரீதேவீமாஹாத்மியம் பாராயணம் (தமிழில் மூலம்)	2	00
தேவி ஸ்தோத்திரம்	2	50
உபநயனம்	3	00
காலிகோ	5	00
குருகீதை	3	25

	ரூ.	பை
நாரத பக்தி சூத்திரங்கள்	1	75
ஜபவிதானம் (பக்கம் 90)	1	00
ஸந்தியாவந்தனம் (பக்கம் 144)	2	00
(தமிழ்) காலிகோ	4	00
,, ,, (நாகரம்—தமிழ்)	4	00
தேவீஸூக்தங்களும் உபநிஷதங்களும்	1	50
புருஷஸூக்தம்	2	25
பூஜாவிதானம் (தமிழ்)	5	00
,, காலிகோ	7	00
,, (நாகரம்)	4	50
V. புராணங்கள்		
ஸ்ரீமத் பாகவத ஸாரம்: முதல் பாகம் (ஸ்கந்தம் 1-9) பக்கம் 560	10	00
ஷை இரண்டாம் பாகம் (ஸ்கந்தம் 10-12) பக்கம் 560	12	50
VI. ஸ்தோத்ரங்கள்		
ஸௌந்தர்யலஹரீ பாஷ்யம்	5	00
காலிகோ	7	00
ஸௌந்தர்யலஹரீ (மூலம்) ,, நாகரம்-தமிழ்	1	50
சிவானந்தலஹரி (பாஷ்யம்)	4	00
,, (மூலம்)	1	00
சிவ ஸ்தோத்திரங்கள்	1	50
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம்	5	00
காலிகோ	6	50
,, ,, பாராயணம்	3	00
,, ,, மூலம்	1	50
ஸ்ரீலலிதா த்ரிசதீ பாஷ்யம்	2	50
ஸ்ரீ லலிதா த்ரிசதீ ஸ்தோத்ரம்	1	00
ஸ்ரீவித்யா	5	00
ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்	6	00
,, ,, ஸ்தோத்ரம் (பாராயணத்திற்குரியது)	2	00
ஸ்ரீ விஷ்ணு ஸ்தோத்ரங்கள்	1	00
பஜகோவிந்தம்	1	00
ஸ்ரீக்ருஷ்ணகர்ணாம்ருதம் (பக்கம் 271)	4	50
அஷ்டோத்தர சத நாமாவளிகள்	0	75
ஆதித்ய ஹ்ருதயம்	0	75
சித்தி விநாயக பூஜை	0	50
நவராத்திரி பூஜை	0	50

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் : : மயிலாப்பூர், சென்னை 600 004

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் Acc No. 38697

தொகுதி—58	ஜூன் 1978	இதழ்—6

பொருளடக்கம்

சந்தாதாரர்கள் கவனிக்க

சந்தா எண் 7001 முதல் 7689 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை ஜூன் மாதத்துடன் முடிவடைகிறது. மேற்கொண்டு பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்ப அடுத்த ஆண்டுச் சந்தாத் தொகை ரூ. 8-யை ஜூன் மாதம் 25-ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சந்தா எண் 8001 முதல் 8123 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை ஜூலை மாதத்துடன் முடிவடைகிறது.

சந்தா எண் 9001 முதல் 9303 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை ஆகஸ்ட் மாதத்துடன் முடிவடைகிறது.

அன்பர்கள் சந்தாவைக் கூடிய விரைவில் செலுத்திப் புதுப்பித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

டெபாசிட் முறை

ஆண்டுதோறும் ரூ. 8 சந்தா செலுத்திப் புதுப்பிப்பதற்குப் பதிலாக ரூபாய் நூறு **டெபாசிட்** செய்துவிட்டால், தொடர்ந்து மாதந்தோறும் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை வந்துகொண்டிருக்கும். பத்திரிகை வேண்டாம் என்று (குறைந்தது ஐந்து வருடங்களுக்குப் பிறகு) கருதும்போது தாங்கள் டெபாசிட் செய்த முழுத் தொகையாகிய ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். டெபாசிட் முறை வெளிநாட்டுக்கு இல்லை.

நிர்வாகி

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

RAMAKRISHNA MATH

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன்இல்லை
— திருமூலர்

தொகுதி 58	காளயுக்தி ஸு ஆனி மீ	இதழ் 6



शिवो यो नामरूपाभ्यां, देवी या सर्वमङ्गला ।
तयोः संस्मरणात् पुंसां सर्वदिग्जयमङ्गलम् ।।

சிவோ யோ நாமரூபாப்யாம் தேவீ யா ஸர்வமங்களா |
தயோ: ஸம்ஸ்மரணாத் பும்ஸாம் ஸர்வதிக் ஜயமங்களம் ||

பெயராலும் உருவத்தாலும் யார் மங்களகரமானவரோ, சிவபெருமானே, சர்வமங்களையான தேவி எவளோ, இவ்விருவரையும் தியானிப்பதனால் மனிதர்களுக்கு எல்லாத் திசைகளிலும் மங்களம் ஏற்படுகிறது.

அருளாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அணுத்துணையுஞ் சினங்காம மடையாமை வேண்டும்
மருளாய வுலகமெலாம் மருள்நீங்கி ஞான
மன்றிடத்தே வள்ளலுனை வாழ்த்தியிடல் வேண்டும்
இருளாமை யுறல் வேண்டும் எனையடுத்தார் சுகம்வாய்ந்
திடல்வேண்டும் எவ்வுயிரு மின்படைதல் வேண்டும்
பொருளாமோர் திருவடிவி லுடையாயும் நானும்
புணர்ந்துகலந் தொன்றாகிப் பொருந்துதல் வேண்டுவனே!

—வடலூர் வள்ளலார்

விஜயதீபம்

உபநிஷதச் சிந்தனைகள்

ஆழ்ந்த கவனம் தேவை

''பரலோக விஷயமும் ஆத்மஞானமும் இவற்றில் கவனமில்லாதவனுக்கும், பொருளில் மோகமடைந்து மதியிழந்துள்ள அவிவேகிக்கும் விளங்கமாட்டா'' என்று உபநிஷதம் தன் கருத்தை, அதாவது என்றும் உள்ள ஓர் உண்மையைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. ஆன்மிக வாழ்க்கையில் அறவே ஈடுபடாத மக்களுக்குப் பொருந்தும் இந்த உண்மை, ஆன்மிக வாழ்க்கையில் ஆழ்ந்து செல்லாத மந்த வைராக்கியம் கொண்டவர்களுக்கும் பொருந்துவதாகவே அமைந்திருக்கிறது.

பரலோக விஷயமும் ஆத்மஞானமும் விவேகிக்கு விளங்கும் என்னும்போது, அவற்றை விவேகி அடைகிறான் என்று ஆகிறது. அவை அவிவேகிக்கு விளங்கமாட்டா என்னும் போது, அவிவேகியால் அவை அடையப்படாமற் போகின்றன, அவனுக்கு அவை சித்திப்பதில்லை, அவனால் அவை சாதிக்கப்படுவதில்லை என்று ஆகிறது.

வாழ்க்கையை நாம் பொறுப்போடும் ஆழ்ந்த கவனத்தோடும் கவனித்து வரவேண்டும். அப்படிச் செய்தால், வாழ்க்கையும் தன் பங்காக நம்மை விழிப்பாக இருந்து கவனித்து, நன்மைக்கு அழைத்துச் செல்லும். அப்படி இல்லாமல், வாழ்க்கையை நாம் விளையாட்டாகப் பொருட்படுத்தினால், அதுவும் நம்மை விளையாட்டுப் பொருளாகக் கருதி, அதோகதிக்கு உருட்டித் தள்ளிவிடும். ஒருவன் சாவகாசமாகப் படுத்துக்கொண்டு, ஏனோதானோ என்று கடவுளிடம் பிரார்த்தனை செய்தானாம். கடவுளும் சாவகாசமாகப் படுத்துத் தூங்கிக் கொண்டே ஏனோதானோ என்று அந்தப் பிரார்த்தனையைக் கேட்டுக்கொண்டாராம். அதாவது முழுமனதோடு கவனம் செலுத்திச் செய்யப்படாத காரியம் தனக்கு உரிய பலனை அளிப்பதற்கு வழியில்லை.

எந்தத் துறையில் முன்னேற வேண்டுமானாலும் உழைப்பும் கவனமும் முற்றிலும் அவசியம். இலௌகிக வாழ்க்கையிலேயே இதை நாம் பார்க்கிறோம். உதாரணமாக, மருத்துவத் துறையிலோ விஞ்ஞானத் துறையிலோ் கல்வித் துறையிலோ ஒருவன் ஒரு பெரிய மேதையாக வரவேண்டுமானால், அதற்காகக் கவனத்தோடு கூடிய பெரும் உழைப்பு இருந்தாக வேண்டும். புலன்களுக்கு உட்பட்ட, ஸ்தூல இலௌகிக வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கே இத்தகைய அயராத உழைப்பும் கவனமும் தேவைப்படுகின்றன என்றால், ஆன்மிக வாழ்க்கையைப் பற்றியோ சொல்ல வேண்டியதே இல்லை.

ஆன்மிக வாழ்க்கையில் மேலான நிலையை அடைவதற்கு முன்னால், ஏராளமான பிறவிகளில் நாம் சேர்த்துள்ள அவித்தையாகிய அழுக்கை நீக்க வேண்டும். பரிசுத்தத்தையே அடித்தளமாகக் கொண்டுள்ள இந்த வாழ்க்கை, புலன்களைக் கடந்த நிலையை இலக்காகக் கொண்டிருக்கிறது.

புலன்களுக்கு உட்பட்ட இலௌகிக முன்னேற்றங்கள் எல்லாவற்றையும் 'அற்பமானவை' என்றும், 'தாழ்ந்தவை (பரவித்தை)' என்றும், நமது நாட்டு மகான்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த

அற்பமானதை அடைவதற்கே பெரிய உழைப்பு - படாத பாடு - தேவைப்படுகிறது. அற்பமல்லாத பரிபூரணம் பிரம்மத்தில் மட்டுமே உண்டு. மிக மிகப் பெரியதும் (பூமா), பேரின்பம் எனப்படுவதுமாகிய புலன்களைக் கடந்து விளங்கும் பிரம்மமயமான நிலையை (ஆத்மாவிலேயே திருப்தி கொண்டு, ஆத்மாவிலேயே விளையாடுகிறவனாக உள்ள 'பிராம்மீ ஸ்திதி' என்ற பெருநிலையை) அடைவது அவ்வளவு எளிதானதல்ல. அதை அடைவதற்காகவே முழு அளவில் தன்னை ஒருவன் ஈடுபடுத்திக்கொண்டால்தான், பிரம்மத்தோடு ஒன்றுபடும் அந்த ஒப்புவமையற்ற பெருநிலையைப் பெற முடியும். அந்தத் தலையாய இலட்சியத்தை இந்தப் பிறவியிலேயே அடைந்துவிடும் உறுதியுடன், அதற்காகவே வரிந்து கட்டிக் கொண்டு கவனக் குறைவுக்கு இடம் கொடுத்து விடாமல் வாழ வேண்டும். இப்படி வாழ்பவர்களே பாக்கியசாலிகள்; வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள்.

ஆன்மிக வாழ்க்கையில் ஆழ்ந்த கவனம் உள்ளவர்களாகத் தீவிரச் சாதகர்கள் இருக்கிறார்கள். இத்தகைய தீவிரச் சாதகர்கள் மட்டுமே ஆத்ம சாட்சாத்காரத்தைப் பெறமுடியும். ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன 'இரண்டு குடியானவர்கள்' கதை, தவ வாழ்க்கையில் கவனம், கவனமின்மை கொண்ட இரண்டு வகையான சாதகர்களையும் பற்றிய உண்மைகளைச் சிறந்த முறையில் விளக்கிக் காட்டியிருக்கிறது.

சாதகன் ஒருவன், 'தான் உண்டு, தான் வழிபடும் தெய்வமாகிய கடவுள் உண்டு' என்று, உலகப் பற்றுக்கு ஆளாக்கும் வேறு எந்தவிதமான சிந்தனைகளுக்கும் உட்படாமல் வாழ வேண்டும். அவ்விதம் மிகமிக எச்சரிக்கையாக இருந்தவர்கள்தாம் இலட்சியத்தை அடைந்திருக்கிறார்கள். கவனத்தோடு வருந்தி உழைக்கும்போதுதான் பரிபூரணநிலை கிட்டும். ''ஒரு க்ஷண நேரத்தையும் வீணாக்காமல் ஆன்மிகச் சாதனைகளில் ஈடுபடு. காலம் ஆற்று நீரைப் போல ஓடிக்கொண்டிருக்கிறது'' என்கிறார் சுவாமி பிரம்மானந்தர்.

''மதிமங்கியவனே! மரணசமயம் நெருங்கும்போது இலக்கணச் சூத்திரம் உன்னை ஒருபோதும் காப்பாற்றவே காப்பாற்றாது. ஆகையால் கோவிந்தனை வழிபடு, கோவிந்தனை வழிபடு, கோவிந்தனை வழிபடு.

''பிராணாயாமம், மனதை வெளிநாட்டத்திலிருந்து உள்முகமாகத் திருப்புதல், அழியும் பொருளையும் அழியாப் பொருளையும் ஆராய்ந்தறிதல், ஜபத்துடன் சமாதி கூடுதல் ஆகிய வற்றைக் கவனத்துடன், மிகுந்த கவனத்துடன் செய்வாயாக'' என்று ஆதி சங்கரர் சாதகர்கள் அனைவருக்குமாகத் தமது 'பஜகோவிந்த'த்தில் வற்புறுத்திக் கூறுகிறார்.

உண்மையில் ஆன்மிக வாழ்க்கையை நடைமுறை அன்றாட வாழ்க்கையில் அனுஷ்டிப்பது என்பது, கத்திமுனையில் நடப்பதைப் போன்றது. எந்தச் சமயத்திலும் வழுக்கி விழும் ஆபத்துகள் மிகவும் ஏராளமாக அதில் இருக்கின்றன. மிகவும் எச்சரிக்கையாக இருந்தவர்களுங்கூட, சிறிதளவுக்குக் கவனம் தவறியதனால் கீழ்நிலையையோ அதோகதியையோ அடைந்திருக்கிறார்கள் என்பதற்குப் புராண காலம் முதல் நவீன காலம் வரையிலும் பல சான்றுகள் உண்டு. பல ஆண்டுகள் சிரத்தையுடன் தவ வாழ்க்கையில் ஈடுபட்டு வந்த ஒருவர், ''நான் திருமணம் செய்துகொள்ளட்டுமா?'' என்று கேட்டாராம். பல ஆண்டுகளை ஆண்டவனின் புகழைப் பாடுவதில் செலவிட்ட ஒருவர் முதுமையில் திருமணமே செய்து கொண்டாராம்.

எனவே ஆத்மஞானம் அடையப்பெறாத கடைசி விநாடி வரையிலும் சாதகன் பாதுகாப்பான நிலையைப் பெற்றவனே அல்ல.

ஆரம்பத்தில் பலரும் ஊக்கத்துடன் ஆத்ம சாதனைகளில் ஈடுபடுகிறார்கள். அவர்களுள், சிறிது கவனம் தவறியதனால் படிப்படியாக ஊக்கத்தை இழந்து, ஆன்மிக வாழ்க்கையிலிருந்தே முற்றிலும் விலகி உலகப்பற்றில் தோய்ந்து போனவர்களும் உண்டு. வள்ளன்மையில் கர்ணனுக்கு இருந்த கவனம், குரு பக்தியில் ஏகலைவனுக்கு இருந்த கவனம், சத்தியத்தில் அரிச்சந்திரனுக்கு இருந்த கவனம், துறவில் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு இருந்த கவனம், சாதகன் ஒருவனுக்கு ஆன்மிக வாழ்க்கையில் இருப்பது முற்றிலும் அவசியம். அத்தகையவனுக்குக் கடவுளின் தரிசனம், அருணோதயத்தைத் தொடர்ந்து சூரியன் உதிப்பதைப் போல மிகவும் விரைவில் வாய்க்கிறது.

''உடலுக்குள்ளே ஜ்யோதிர்மயமாய்ப் பரிசுத்தமாய் விளங்கும் எந்த ஆத்மப் பொருளைச் சித்தமலம் நீங்கிய சன்னியாசிகள் காண்கிறார்களோ, அந்த ஆத்மப்பொருளை அகண்டமான பிரம்மசரியத்தாலும் தெளிந்த ஞானத்தாலும் இடைவிடாத தவத்தாலும் சத்தியத்தாலுமே அடைய இயலும்''* என்று முண்டக உபநிஷதம் கூறுகிறது. ஆன்மிக வாழ்க்கையில் கருமமே கண்ணாக இருக்கும் ஆழ்ந்த கவனம் இல்லாத சாதகனால், இந்த உபநிஷத மந்திரம் குறிப்பிடுவதைப் போன்ற அகண்டமான பிரம்மசரியம், குறைவுபடாத தெளிந்த ஞானம், இடைவிடாத தவம், இடைவிடாத சத்தியம் ஆகிய ஆத்மசாதனங்களை முழுமையாக அனுஷ்டிக்க முடியாது. அந்த நிலையில் ஆத்மப்பொருளின் தரிசனத்தை அதாவது பரம்பொருளை அனுபூதியில் உணரும் நிலையையும் பெற முடியாது.

ஆத்மசாதனங்கள் என்னும் உழைப்பு இல்லாத நிலையில் அதன் ஊதியமாகிய கடவுள் தரிசனமும் கிடைப்பதற்கு இல்லை. ''அழுது அழுது புலம்பியவர்கள்தாம் கோவிந்தனை அடைந்திருக்கிறார்கள். சிரித்துக்கொண்டே கோவிந்தனைப் பெற முடியுமானால் உலகில் அனைவருமே கோவிந்தனை அடைந்துவிட்டிருப்பார்களே!'' என்று சொல்வதன் மூலம் ஆழ்ந்த கவனம்தான் கடவுள் சாட்சாத்காரத்துக்கு ஒரே வழி என்பதைக் கபீர்தாசர் சுட்டிக் காட்டுகிறார்.

''தாயே! உனது தரிசனம் கிடைக்காமல் என் வாழ்நாளில் மற்றுமொரு நாள் கழிந்துவிட்டதே! இன்னும் எனக்கு உன் தரிசனம் கிடைக்கவில்லையே!'' என்று காளிதேவியின் தரிசனத்திற்கு முன்பு ஸ்ரீராமகிருஷ்ணர் செய்த பிரார்த்தனைகளும், உக்கிரமான தவமும், 'கடவுளின் நினைவு ஒன்று மட்டுமே ஒரு சாதகனின் உள்ளத்தில் எந்த அளவுக்கு ஆக்கிரமிக்க வேண்டும்' என்பதற்குச் சிறந்த விளக்கமாகத் திகழ்கின்றன.

வாழ்க்கையின் பல அம்சங்களில் ஒன்றாகவோ, பொழுதுபோக்காகவோ மதத்தை வைத்துக்கொண்டால், மதம் தனக்கு உரிய பலனைத் தராது. ஏனென்றால் அந்த நிலையில் கவனக் குறைவுதான் தலைதூக்கி நிற்கிறது. மதம் முழு வாழ்க்கையையும் தழுவியதாக இருக்க வேண்டும். பயிர்த்தொழில் செய்பவன் கவனக் குறைவுடன் அந்தத் தொழிலில் ஈடுபட்டால், பயிர் தனக்கு உரிய முழுப் பலனைத் தருவதற்கு வழியில்லை. இந்த உண்மை ஆன்மிக வாழ்க்கைக்கும் முற்றிலும் பொருந்தும்.

இத்தனை ஆண்டுகளாக இந்த உலகில் வாழ்ந்திருக்கிறோம். உலக வாழ்க்கையைப் பற்றிய பலவித அனுபவங்களைப் பெற்றிருக்கிறோம். அதாவது ஒரு பகுதி உலகத்தைப் பார்த்திருக்கிறோம். மறுபகுதி உலகமாக, புனிதம் ததும்பும் ஆன்மிக வாழ்க்கை இருக்கிறது. 'அந்த மறுபகுதி உலகத்தில் என்னதான் இருக்கிறது?' என்று, பலவிதத் தியாகங்களையும் மேற்கொண்டு, சான்றோர்கள் கடவுளை நோக்கி ஆர்வத்தோடு விரைந்திருக்கிறார்கள். அதை ஊன்றிக் கவனித்து, மகான்கள் காட்டிய வழியில் வாழ்ந்தால், அனுபவபூர்வமாக நாமும் கடவுளை உணரலாம்.

* ஸத்யேந லப்யஸ் தபஸா ஹ்யேஷ ஆத்மா ஸம்யஜ்-ஜ்ஞாநேந
ப்ரஹ்மசர்யேண நித்யம் | அந்த:சரீரே ஜ்யோதிர்மயோ ஹி
சுப்ரோ யம் பச்யந்தி யதய: க்ஷீணதோஷா: ||
—முண்டக உபநிஷதம், 1-5.



செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து முடிக்கும் தினமே உண்மையான உற்சவ தினமாகும். — **அசோக சக்கரவர்த்தி**

கடவுள் பாவத்தை மன்னித்துவிடுகிறார். இல்லாவிட்டால் சுவர்க்கம் முழுவதுமே காலியாகத்தான் இருக்கும். — **ஜெர்மன் பழமொழி**

நம் தவறுகளுக்காக நாம் வருந்துவதற்கும், இன்றைய நிலையை விட மேலான பரிசுத்த நிலையை அடைய விரும்புவதற்கும் சின்னமாக விளங்குகிறது பிரார்த்தனை. — **காந்தியடிகள்**

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

திருமுருக கிருபானந்தவாரியார்

> ஆர்க்காட்டில் நடைபெற்ற ஸ்ரீராம கிருஷ்ண-விவேகானந்த மன்றத்தின் ஆண்டு விழாவில் வாரியார் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்.

கடவுளும் ஸ்ரீராமகிருஷ்ணரும்

ஸ்ரீராமகிருஷ்ணர் தேவியின் குழந்தை. அவர் எந்த நேரமும், நாம் நம் எதிரில் இருக்கும் மனிதர்களிடம் பேசுவது போல் காளியிடம் பேசுவார். காளி பேசுவாளா? பேசுவாள். தவம் இருந்தால் பேசுவாள். ஸ்ரீராமகிருஷ்ணர் என்ன கொஞ்சமான தவமா செய்தார்? அப்பா! அவர் செய்த தவம் போல் யாரால் செய்ய முடியும்? அவரிடத்திலே போய்தான் நரேந்திரர், பிற்காலத்திலே விவேகானந்தரான இளைஞர், ''கடவுளைக் காட்ட முடியுமா?'' என்று கேட்டார். ''ஓ! நன்ருகக் காட்டு கிறேன்'' என்ருர். விவேகானந்தரைத் தொட்டார். அவ்வளவுதான், அவரெதிரில் இருந்த ஸ்ரீராமகிருஷ்ணர், வீடு, கதவு, பொருள்கள் எல்லாம் மறைய, சுழலத் துவங்கின! உலகமே சுழலத் துவங்கியது. உடனே நரேந்திரர், ''ஐயோ! என்னை என்ன செய்கிறீர்கள்? எனக்கு வீட்டில் அம்மா இருக்கிருள். அப்பா இருக்கிருர்'' என்று அலற ஆரம்பித்தார். அப்படி ஒருவரைக் கையால் தொடுவதனுலேயே அவருக்குக் கடவுளைக் காட்டும் ஆற்றலைப் பெற்றிருந்தார் பரமஹம்சர்.

ஒரு நொடியில் கடவுளைக் காணலாம்

ஒரு பக்தர் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் வந்து, ''கடவுளை நான் பார்க்க முடியுமா?'' என்று கேட்டார். உடனே பகவான், ''முடியும்; பார்க்கலாம்'' என்று சொன்னுர். ''எத்தனை நாட்களில் பார்க்கலாம்?'' என்ருர் வந்தவர். பகவான் சொன்னுர்: ''நாட்களிலா? இதற்கு ஏன் நாட்கணக்கு வேண்டும்? ஒரு நொடியில் பார்த்துவிடலாம்'' என்று சொன்னுர். ''அது எப்படி முடியும்?'' என்ருர் வந்தவர். ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்னுர்: ''நிச்சயமாக முடியும். ஒரு தாய்க்குப் பிள்ளையின் மேல் இருக்கும் பாசம், ஒரு கஞ்சனுக்குப் பணத்தின் மேல் இருக்கும் பாசம், ஒரு பதிவிரதைக்குக் கணவன் மேல் இருக்கும் பாசம்—இந்த மூன்று பாசங்களும் சேர்ந்த பாசம் உனக்குக் கடவுளைப் பார்க்க வேண்டும் என்று எப்போது தோன்றுகிறதோ, அந்த விநாடியே நீ கடவுளைப் பார்த்துவிடலாம்'' என்ருர். அத்தகைய பாசம் பகவானிடத்தில் நமக்குத் தோன்ற வேண்டும்.



மலடியின் பாசம்

கல்யாணமான ஒரு வருஷத்திலேயே குழந்தை பிறந்துவிட்டால் குழந்தையின் அருமை நமக்குத் தெரியாது. எரிச்சலாகக்கூட இருக்கும். கல்யாணமான பிறகு ஆண்டு ஒவ்வொன்ருகக் கழிந்து குழந்தை வேண்டும் என்ற ஆசை வந்து, ஆசை ஆவலாக மாறி, ஆவல் ஏக்கமாக மாறி, குழந்தைக்காக ஏங்கி ஏங்கி, பார்க்கிறவர்கள் எல்லாம் இவளை மலடி மலடி என்று சொல்லி இரவும் பகலும் அழுது, கடைசியில் நாற்பதாவது வயதில் அவளுக்கு ஒரே ஓர் அழகான ஆண்குழந்தை பிறந்தால் அந்த மலடிக்கு அந்தக் குழந்தையிடம் எவ்வளவு பாசம் இருக்குமோ, அதை எப்படி எல்லாம் சீராட்டுவாளோ, அப்படிப்பட்ட பாசம் நமக்குக் கடவுளிடத்தில் வர வேண்டும்.

பொன் ஆசை

பெண் ஆசை என்பது சிலருக்கு இல்லாமற் போனுலும், பொன் ஆசை மட்டும் கொஞ்சம் கொஞ்சம் இருக்கும். இது வயதாகிவிட்டால் கூட இருக்கிற ஆசை. எதற்குச் சேர்க்கிருேம் என்றுகூடத் தெரியாமல் சேர்த்துக்கொண்டே இருப்பார்கள். ஸ்ரீராமகிருஷ்ணருக்கோ, தங்

சுத்தை—பணத்தைக் கையால்கூடத் தொட முடியாது. தொட்டால் கையில் பயங்கரமான வலி எடுக்கும். விவேகானந்தர் பார்த்தார். 'இவர், ''என்னால் நாணயத்தை—தங்கத்தைத் தொடக்கூட முடியாது. தொட்டால் வலிக்கும்'' என்று சொல்லுகிறாரே. இது உண்மையாக இருக்குமா? சோதித்துப் பார்க்கலாம்' என்று நினைத்தார். அப்போது ஸ்ரீராமகிருஷ்ணர் தமது அறையிலிருந்து வெளியே போயிருந்தார். உடனே விவேகானந்தர் ஒரு நாணயத்தை எடுத்து அவர் கட்டிலில் மெத்தையின்கீழ் வைத்துவிட்டு, ஒன்றும் தெரியாதவர்போல் அந்த அறையில் இருந்தார். வெளியே போயிருந்த ஸ்ரீராமகிருஷ்ணர் உள்ளே வந்து படுக்கையில் படுத்தார். அவ்வளவுதான், உடனே உடம்பில் ஏதோ தேள் கொட்டியது போல வலி. துடித்து எழுந்துகொண்டார். படுக்கையில் ஏதாவது இருக்கிறதா என்று மேலும் கீழும் பார்த்தார். ஒன்றும் இல்லை; மறுபடியும் மெல்ல உட்கார்ந்தார். மறுபடியும் அதே வலி. பக்கத்தில் இருந்தவர்களைக் கூப்பிட்டார். படுக்கையைச் சோதனை செய்யச் சொன்னார். சோதனை செய்தார்கள். அடியில் நாணயம் இருந்தது.

பொன் ஆசைகூட அவரிடம் அறவே இல்லை. பொன்னை ஒரு கையிலும், மண்ணை ஒரு கையிலும் எடுத்துக்கொண்டு, கங்கைக் கரையில் உட்கார்ந்தவாறு மண்ணை நீரில் போட்டு 'இது மண்', மறுபடியும் பொன்னை நீரில் போட்டு 'இதுவும் மண்' என்று சொல்லி, மண்ணுக்கும் பொன்னுக்கும் வித்தியாசம் காணாமல் வாழ்ந்தார் அவர்.

ஸ்ரீராமகிருஷ்ண மடம்

இந்தியாவில் இந்து சமயத்தில் எத்தனையோ மடங்கள் இருக்கின்றன. ஆனால் ஸ்ரீராமகிருஷ்ண மடம் போன்று மடங்களோ, ஸ்ரீராமகிருஷ்ண மடத்துத் துறவிகளைப் போன்று துறவிகளோ இல்லை. மற்ற மடங்களுக்கும் துறவிகளுக்கும் தங்கள் முன்னேற்றத்தில், தாங்கள் கடவுளை அடைய வேண்டும் என்பதில்தான் அக்கறை; அதிலேதான் எந்நேரமும் ஈடுபாடு. ஆனால் ஸ்ரீராமகிருஷ்ண மடத்துத் துறவிகளோ மற்றவர்களுக்காக, ஏழைகளுக்காக, துன்பப்படுபவர்களுக்காக வாழ்கிறார்கள். எங்கெல்லாம் இந்தியாவில் இயற்கையின் கொடுமையால் துன்பங்கள் ஏற்படுகின்றனவோ அங்கெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ண மடத்துத் துறவிகளைப் பார்க்கலாம். முன்பு பவானியில் வெள்ளம் வந்தது. கணக்கில்லாத ஏழைகள் வெள்ளத்தால் துடித்தார்கள். அங்கே ஸ்ரீராமகிருஷ்ணத் துறவிகள் இருந்தார்கள். இராமேசுவரத்தில் கொடுமையான வெள்ளம்; சொல்ல முடியாத துன்பம். அங்கேயும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, ஏழைகளுக்கு அருகே, அவர்கள் தாம் இருந்தார்கள்; தொண்டு செய்தார்கள்.

350 போக்கிரிகள்

திருப்பராய்த்துறையில் ஸ்ரீராமகிருஷ்ணர் குடில் என்ற பெயரில் ஓர் அநாதை இல்லம் இருக்கிறது. தாய் தந்தை இல்லாத 350 அநாதைக் குழந்தைகள் நல்ல படிப்பு, நல்ல உணவு, நல்ல ஒழுக்கம் இவற்றைப் பெற்று ஆண்டுதோறும் அங்கிருந்து வெளியே வருகிறார்கள். அப்படிப்பட்ட ஓர் இடமே இல்லை என்றால் என்ன ஆகும்? நன்றாக நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்: ஆண்டுதோறும் 350 போக்கிரிகள் இந்த நாட்டிலே உருவாவார்கள். ஏனென்றால், முறையாக வளர்க்கப்படாத, ஆதரவு காட்ட ஆள் இல்லாத அநாதைப் பிள்ளைகள் வேறு எப்படி வளருவார்கள்? இவர்களை எல்லாம் மனிதர்களாக்கிச் சமுதாயத்தைக் காப்பாற்றி வருகின்றன ராமகிருஷ்ணர் பெயரால் அமைந்த மடங்களும், அநாதை இல்லங்களும். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் செய்த தவம் நம்மை இப்படி எல்லாம் காப்பாற்றிக்கொண்டு வருகிறது. அவருடைய தவம் சுவாமி விவேகானந்தர் மூலம் உலகம் முழுவதும் பரவி, மடங்களாக, அநாதை இல்லங்களாக, ஆயிரம் ஆயிரம் அமைப்புக்களாக உருவெடுத்துள்ளன. எனவே, கொட்டும் மழையிலும் இவ்வளவு திரளாக இங்கே வந்திருக்கும் நீங்கள் அத்தனை பேரும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றி மேலும் மேலும் தெரிந்துகொண்டு, அவர் பெயரால் ஆர்க்காட்டில் அமைந்திருக்கும் ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த மன்றத்துக்கு இயன்ற வரையில் ஆதரவு தந்து, இது போன்ற அமைப்புகள் சிறப்பாக வளர உதவும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். வணக்கம்.

இன்றைய 10 + 2 + 3 கல்வியின் நிலை

பேராசிரியர் **T. K.** நாராயணன், M. Sc.

அமெரிக்கன் கல்லூரி, மதுரை

விளையாட்டு மைதானத்தில் கால் பந்தாட்டத்தின்போது பந்தானது ஆட்டக்காரர்களின் கால்களுக்கிடையே அடியும் உதையும் பட்டு எந்த விதமாக அங்கும் இங்கும் அலைக் கழிக்கப்படுகிறதோ, அது போல இன்றையத் தலைவர்களின் கையில் சிக்குண்டு நமது கல்வித் திட்டம் நிலைகுலைந்திருக்கிறது.

முன்பு பதினெரு வருடம் பள்ளிக் கல்வி, இரண்டு வருடம் இன்டர்மீடியட், இரண்டு வருடம் பட்டப் படிப்பு என்று இருந்தது. பின்னர் பதினெரு வருடம் பள்ளிப் படிப்பு, ஒரு வருடம் புதுமுகக் கல்வி, மூன்று வருடம் பட்டப் படிப்பு என்று மாறித் தற்சமயம் பத்து வருடம் பள்ளிப் படிப்பு, இரண்டு வருடம் ஹையர் செகண்டரி, மூன்று வருடம் பட்டப் படிப்பு என்பதாக மாறியமைய இருக்கிறது.

10 + 2 + 3 என்று முடிவு கட்டிக் கல்வி வல்லுநர்கள் திட்டமெல்லாம் தீட்டிப் புதிய முறைக்கு மாற இருக்கும் தருணத்தில், மேலிடத்தில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள ஒரு சில உயர் தலைவர்கள், 'இந்தத் திட்டத்தால் யாருக்கு என்ன உருப்படியான நன்மை விளையப் போகிறது?' என்று அதைக் குறித்த தங்களது அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இரண்டு வருட ஹையர் செகண்டரிப் படிப்பைப் பள்ளியில் இணைப்பதா அல்லது கல்லூரியில் சேர்ப்பதா அல்லது அதில் பாதி இதில் பாதி என்று வைத்துக் கொள்வதா என்பது குறித்துக் கல்வியாளர்களும் அரசினரும் ஒரு திட்டவட்டமான முடிவுக்கு இன்னும் வந்தபாடில்லை. இந்த நிலையில் அடுத்த கல்வி ஆண்டிலிருந்து இது அமலுக்கு வர இருக்கிறது.

இரண்டாண்டு ஹையர் செகண்டரிப் படிப்பை வைத்துக்கொள்ள வசதியுள்ள, வைத்துக்கொள்ளத் தகுதியான, வைத்துக் கொள்ள விரும்புகின்ற கல்லூரிகள் பல, அவை தங்களுக்குத் தரப்படவில்லையே என்று ஒரு புறம் ஏங்கிக் கொண்டிருக்க, 'எங்கள் பள்ளியில் இப்போது இருக்கும் மாணவர்களுக்கே போதுமான வகுப்பறைகளும் வசதிகளும் இல்லையே! இந்த நிலையில் இந்த ஹையர் செகண்டரி வகுப்புகளை நாங்கள் எப்படி ஏற்று நடத்துவது?' என்று தங்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் புதுப் பொறுப்பைக் கண்டு பிரமித்து நிற்கும் பள்ளிகள் மறு புறம்.

'புதுமுக வகுப்பும் நீக்கப்பட்டு இரண்டாண்டு ஹையர் செகண்டரி வகுப்புகளும் கல்லூரிகளில் இல்லாமல் பள்ளிகளிலேயே இருக்கும் என்றதொரு நிலை உருவானல் எங்களில் எத்தனை பேருடைய வேலை பறி போகுமோ!' என்று தங்கள் எதிர்காலத்தைப் பற்றி ஏங்கி நிற்கின்றனர் கல்லூரி ஆசிரியர்கள் பலர்.


தபால் மூலம் கல்வி, திறந்த வெளிப் பல்கலைக்கழகக் கல்வி (Correspondence course, Open-University) போன்ற புதிய திட்டங்களால் கலைக் கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து கொண்டு வருவதால் கல்லூரிகளின் நிதி நிலைமையைச் சமாளிக்க எந்த எந்த வகுப்புகளை மூடலாம், எந்த எந்த ஆசிரியர்களை வெளியேற்றலாம் என்று கல்லூரி நிர்வாகத்தினர் ஒரு புறம் திட்டம் தீட்டுகின்றனர்.

'உள்ள சம்பளத்தையே ஒழுங்காகப் பெற முடியவில்லை. வேலையிலும் உறுதியற்ற நிலை. அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் புதிய திட்டத்தால் என்ன என்ன புதிய சிக்கல்கள் முளைக்கப் போகின்றனவோ! இந்த வேலையும் இருக்குமோ பறிபோகுமோ!' என்பதுவே கல்லூரி ஆசிரியர்களின் அச்சம். 'புதிய கல்வித் திட்டத்தில், ஹையர் செகண்டரிப் படிப்பைப் பள்ளியில் இணைப்பதால் கல்லூரி ஆசிரியர் எவரும் வேலையை இழக்கும் நிலை உருவாகாது' என்று இன்றைய கல்வி அமைச்சர் உறுதிமொழி பன்முறை அளித்த பின்னருங் கூடத் தங்களது எதிர்காலம் பற்றி ஏங்கிய வண்ணம் சோகமாக அவர்கள் காட்சி தருகின்றனர்.

''நீங்கள் எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தால் எங்களுக்கென்ன? படித்து முடித்ததும்

வேலை வாய்ப்புக்கு வகை செய்யாத வெறும் காகிதப் பட்டங்களால் எங்களுக்கு ஆகப் போவதென்ன? எங்களுக்கு வேண்டியது வேலையே தவிர இந்த வெட்டிப் பட்டங்கள் அல்ல'' என்று, வகுப்புகளையும் பரீட்சைகளையும் புறக்கணித்துப் பரீட்சையறைகளில் கேள்வித் தாள்களையும் விடைத் தாள்களையும் கிழித்துப் போட்டுவிட்டுப் பரீட்சை எழுதாது வெளியேறும் அவல நிலையில் இன்றைய மாணவர்களில் பலர் காட்சி தருகின்றனர். அவர்களது கோரிக்கையும் அர்த்தமற்றதல்ல; செவி சாய்த்துச் செயற்பட வேண்டியதே.

இது போன்ற முக்கியமான உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்னைகள் பல இன்று நம் முன் விசுவரூபம் எடுத்து அச்சுறுத்திக்



கொண்டிருக்கும் வேளையிலே, 'பள்ளியில் மட்டுமல்லாது கல்லூரியிலும்—அதிலும் பட்டப் படிப்பில் மட்டுமல்லாது பட்ட மேற் படிப்பு (Post graduate) வகுப்பிலும் போதனா மொழியாக அந்த அந்தப் பிராந்திய மொழிகளையே கொண்டு வருவோம்' என்று அரசினரும், கல்வியாளர்களில் ஒரு சிலரும் முடிவு செய்திருப்பது மிகவும் வருத்தத்திற்கு உரியதாகும். ஏற்கெனவே கிடுகிடுவென்று பள்ளத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் நமது உயர்கல்வித் தரத்தை இது மேலும் பன்மடங்கு மோசமாக்கிவிடுமே என்று பெற்றோரும் மற்றோரும் கவலைப்படுகின்றனர்.

பள்ளிக் கல்வியில் போதனா மொழி தாய் மொழியில் இருப்பது முற்றிலும் பொருந்தும். ஆனால் உயர்கல்வியில் இன்றைய சூழ்நிலையில் அது பொருந்தாது. தினந்தோறும் புதுப் புதுக் கண்டுபிடிப்புகள் உலகின் பல நாடுகளில் நிகழ்ந்துகொண்டிருக்க, அவையெல்லாம் அருமையான ஆங்கில நூல்களாக அவ்வப்பொழுது வெளியிடப்படுகின்ற ஒரு சூழ்நிலையிலே, அவற்றின் பிராந்திய மொழிபெயர்ப்பு நூல்கள் நம்மிடம் இல்லாத நிலையில், பிராந்திய மொழியைப் பட்டம், பட்ட மேற்படிப்பு நிலையிலும் புகுத்திவிடுவோம் என்றால், அதனால் மாணவர்களுக்கோ மற்றவர்களுக்கோ என்ன நன்மை ஏற்படும்? நன்மை எதுவும் ஏற்படாது என்பது ஒரு புறம் இருக்க அதனால் ஏற்பட இருக்கும் தீமைகள்தாம் அதிகமாக இருக்கும்.

உயர்மட்டக் கல்வி பிராந்திய மொழியில் அமையுமேயானால் குறிப்பாக விஞ்ஞானப் பாடங்களைப் புகட்ட வல்ல ஆசிரியர்கள், மற்றும் பாடப் புத்தகங்கள் போன்றவை கிடைப்பது அரிது. அகில இந்திய ரீதியில் உள்ள அணு ஆய்வுக் கூடங்கள், சோதனைச் சாலைகள் போன்றவற்றில் ஒரு குறிப்பிட்ட பிராந்திய மொழியில் படித்தவர்களுக்கு வேலை கிடைப்பதில் சிக்கல்கள் பல தோன்றும். தவிர எல்லாவற்றிற்கும் மேலாக, அகில இந்திய மனப்பான்மை குறைந்து, பிராந்தியப் பித்து தலை விரித்தாடும் அவலநிலை நிச்சயம் அதனால் அதிகரிக்கும். ஒரு பிராந்தியத்தில் பட்டம் பெற்றோருக்கு அடுத்த பிராந்தியத்தில் வேலை கிடைப்பது இயலாததாகிவிடும். உயர்மட்டக் கல்வியில் ஆங்கிலம் போதனா மொழியாக உள்ள இன்றைய சூழ்நிலையிலேயே இத்தகைய சிக்கல்கள் அதிகம் நிலவுகின்றன என்பது நம்மில் பலருக்கு நன்கு தெரியும். போதனாமொழி பிராந்திய மொழியாக மாறிவிட்டால் இந்தச் சிக்கல் எவ்வளவு தூரம் கூடும் என்பதை விளக்கிக் கூற வேண்டியதில்லை.

இன்று நம்மிடையே உள்ள கல்விமுறையால் சமுதாயத்தின் எந்தப் பகுதியினருக்காவது திருப்தி ஏற்பட்டிருக்கிறதா எனில், யாருக்கும் எந்த விதத்திலும் அது திருப்தியை ஏற்படுத்தவில்லை என்பதே நமக்குக் கிடைக்கும் பதிலாகும். மாணவர்களின் அவ்வப்போதைய கிளர்ச்சிகளால் ஒழுங்காகப் பரீட்சைகளை நடத்த இயலாத பல்கலைக் கழகத்தினர் ஏதோ ஒரு சடங்கைப் போலப் பரீட்சைகளை எப்படியோ நடத்த வேண்டிய நிலை உருவாகிறது. ஆசிரியர்களோ தாங்கள் பெறும் சம்பளத்திற்கு ஏதோ சொல்லிக் கொடுத்தோம் என்ற நிலையில், படிப்பில் நாட்டமில்லாத பெரும்

பாலான மாணவர்களுக்கு எதையோ சொல்லிக் கொடுக்க வேண்டியுள்ளது. மாணவர்களைப் பற்றிச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஒரு குறிப்பிட்ட சதவீதம் வகுப்புகளுக்குச் செல்லாவிட்டால் பரீட்சைகளுக்குச் செல்ல முடியாதே என்பதற்காகக் கடனே என்று வகுப்பில் பெரும்பாலான மாணவர்கள் நேரத்தைச் செலவிடுகின்றனர். தேர்வுச் சமயங்களில் எதையோ உருப்போட்டு அவர்கள் எழுதிவிடுகின்றனர். பெற்றோர்களில் பெரும்பாலோர், குறிப்பாகக் கிராமப்புறத்திலுள்ளோர், ஏதோ தங்கள் மக்கள் கல்லூரியில் படிக்கின்றனர் என்று சொல்லிக்கொள்வதில் திருப்தியடைந்து விடுகின்றனர். அவர்கள் நகரங்களில் உள்ள கல்லூரிகளில் படிக்கும் தங்களது மக்களின் படிப்புச் செலவிற்காக அனுப்பும் தொகை, மற்றும் அரசாங்கம் அளிக்கும் உதவித்தொகை இவையெல்லாம் எந்த விதத்திலெல்லாமோ விரயமாக்கப்படுகின்றன என்பதை அறியாமல் இருக்கின்றனர்.

இன்றைய கல்வியினுல் மாணவர்களிடையே ஒழுக்கமும் கட்டுப்பாடும் வளர்ந்திருக்கின்றனவா என்றால் அங்கும் 'இல்லை' என்ற பதிலே நமக்குக் கிடைக்கிறது. ஏன்? இன்றைய கல்வித் திட்டத்தில் அப்படி ஓர் அம்சத்திற்கு இடம் இருப்பதாகவே தெரியவில்லை. 'ஏட்டுக் கல்வி கறிக்கு உதவாது' என்ற பழமொழி இன்றைய நமது கல்வித் திட்டத்திற்கு மிகவும் பொருந்தும்.

இன்றைய நமது கல்விமுறையின் இந்த அவலநிலை மாற நாம் என்ன செய்ய வேண்டும்?

வேலைவாய்ப்புக்கு வகை செய்யும் விதத்தில் கல்வித் திட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

உயர்கல்வி அளவில் ஆங்கிலமே போதனு மொழியாக நீடிக்கப்பட்டு, தேசிய மனப்பான்மையுடன் நாடு முழுவதிலும் எங்கும் வேலை கிடைக்க வகை செய்தல், கல்வியில் உயர் தரம் ஆகியவை ஊக்குவிக்கப்பட வேண்டும்.

அடிக்கடி கல்வித் திட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடாது.

மெகாலே பிரபு தீட்டிய அன்றைய குமாஸ்தாக் கல்விமுறையைக் கைவிட்டு நமது ஆன்மிகப் பாரம்பரியச் சூழலுக்கேற்பப் பாடத் திட்டம் அமைக்கப்பட வேண்டும்.

ஒழுக்கமும் கட்டுப்பாடுமே மனித வாழ்க்கையின் அடிததளங்களாகும். குறிப்பாக மாணவர்களிடம் இருக்க வேண்டிய நற்பண்புகள் அவை. ஒழுக்கத்தை வளர்க்காத கல்வி உயிரற்ற உடலுக்கு நிகர். இந்த முக்கிய அம்சம் இன்று பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்களில் பெரும்பாலோரிடையே காணப்படாதிருப்பது மிகவும் வருந்தத்தக்க அம்சமாகும். தவறு யாருடையது? மாணவர்களுடையது மட்டுமல்ல. கல்வியாளர், ஆசிரியர், பெற்றோர் ஆகிய அனைவருடையதுமாகும்.

எனவே இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, மாணவர்களிடையே ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் வளர்க்கும் விதத்தில், படித்து முடித்த பின் அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு வகை செய்யும் விதத்தில், மாணவர்களாகவே விரும்பி முன்வந்து கற்கும் விதத்தில், அமைந்த ஓர் இலட்சியக் கல்விமுறை நம்மிடையே உருவாவதற்கு வேண்டிய முயற்சியில் கல்வியாளர்களும் ஆட்சியாளர்களும் முழு மனதுடன் ஈடுபடுவார்களாக!



தவறுகளுக்குத் தண்டனை தராத இடம் தாயின் நெஞ்சமெனும் நீதிமன்றமே. — சாக்ரடீஸ்

முள் இல்லாத ரோஜா கிடையாது. கலப்பில்லாத நன்மை இந்த உலகில் இல்லை. முழு நலமாய் இருப்பது பரம்பொருள் ஒன்றேயாகும். — ராமதீர்த்தர்

வெறும் பேச்சின்மூலம் யாரும் சொர்க்கலோகத்தை அடைய முடியாது; நேர்மையாக வாழ்வதன் மூலமாகத்தான் ஒருவன் மேலான கதியைப் பெற முடியும். — சீக்கியம்



— ஸ்ரீஆஞ்சநேயரின் கர்வபங்கம்

—சரஸ்வதி

சொல்லின் செல்வன் ஆஞ்சநேயர் இலங்கையை எரித்த பிறகு ஸ்ரீராம பிரானைக் காண்பதற்காகத் திரும்பி வந்துகொண்டிருந்தார். அப்போது அவருடைய உள்ளம் நடந்துபோன விஷயங்களை நினைத்து அசை போட்டது. 'அப்பப்பா! எவ்வளவு வேலைகளை நான் செய்திருக்கிறேன்! சமுத்திரத்தைத் தாண்டினேன்; சீதாபிராட்டியைத் தேடிக் கண்டுபிடித்தேன்; ராவணனுடைய மகனைக் கொன்று ராவணனையே கண்டு பேசினேன்; இலங்கைக்கு நெருப்பு வைத்து அரக்கர்களைக் கதிகலங்க அடித்தேன்' என்றெல்லாம் அவர் தம்மைப் பற்றி நினைத்தவுடனே அவருடைய உள்ளத்தில் கர்வம் தோன்ற ஆரம்பித்தது. அனுமனின் இந்த மனமாற்றத்தைப் பகவான் உடனே அறிந்துகொண்டார்.

தமது வீரச் செயல்களை நினைத்துப் பார்த்த ஆஞ்சநேயருக்குப் பெருமை தாங்க முடியவில்லை. ஆகவே அவர் மகிழ்ச்சி பொங்க, பலத்த கர்ஜனையுடன் வந்துகொண்டிருந்தார். வழியில் அவருக்குத் திடீரென்று தாகம் உண்டாயிற்று. தண்ணீர் குடிக்காமல் மேலே பிரயாணத்தைத் தொடர முடியாது என்று தோன்றியது. உடனே நின்றார். அந்த இடம் மகேந்திர மலை. நான்கு புறமும் கண்களை ஓடவிட்டு நீர்நிலை ஏதாவது தென்படுகிறதா என்று பார்த்தார். தண்ணீர் இருக்கும் இடம் எதுவும் கண்ணில் படவில்லை. ஆனால் அங்கே சற்றுத் தூரத்தில் அமைதியின் உருவமாக ஒரு முனிவர் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

மாருதி, முனிவரின் அருகே சென்று அவரை வணங்கினார்: ''முனிவரே! நான் இராமபிரானுக்காகச் சீதையைத் தேடிக் கண்டுபிடிக்கும் வேலைகளைச் செய்து முடித்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருக்கிறேன். எனக்கு இப்போது மிகவும் தாக மாக இருக்கிறது. தயவுசெய்து எனக்குக் குடிக்கச் சிறிது தண்ணீர் தாருங்கள். அல்லது நீர்நிலை ஏதாவது இருந்தால் அது இருக்கும் இடத்தைக் காண்பியுங்கள்; நானே சென்று குடித்துக்கொள்கிறேன்'' என்று கூறினார்.

முனிவர் எதுவும் பேசவில்லை. புன்னகையுடன் அவர் தண்ணீர் இருக்கும் திசையைத் தம் விரலால் சுட்டிக் காட்டினார். ஆஞ்சநேயர் புரிந்துகொண்டு மகிழ்ச்சியுடன் நீரைத் தேடிப் புறப்பட்டார். போவதற்கு முன்பு சீதை அவரிடம் கொடுத்த சூடாமணி, ராமனின் முத்திரை மோதிரம், மற்றும் பிரம்மதேவன் அளித்த ஒரு கடிதம் ஆகிய மூன்றையும் எடுத்து முனிவரின் முன்னால் வைத்து விட்டுத் தண்ணீர் குடிப்பதற்காகப் போனார்.

சிறிது நேரத்தில் வேறொரு குரங்கு முனிவர் இருந்த இடத்திற்கு வந்தது. அது, முனிவரின் முன்னால் ஆஞ்சனேயர் வைத்துச் சென்ற பொருள்களை எடுத்து முனிவரின் அருகில் இருந்த கமண்டலத்திற்குள் போட்டுவிட்டு ஓடிவிட்டது! அதையும் முனிவர் புன்னகையுடன் பார்த்துக்கொண்டிருந்தார்.

தாகசாந்தி செய்துகொண்ட பிறகு ஆஞ்சனேயர் முனிவர் இருந்த இடத்திற்கு வந்தார். அவர் முனிவரின் முன்னால் தாம் வைத்துச் சென்ற பொருள்களைக் காணாமல் திடுக்கிட்டார். முனிவரிடம் அவர், ''சுவாமி! நான் இங்கே வைத்துச் சென்ற பொருள்கள் எங்கே?'' என்று வினவினார். முனிவர் அப்போதும் பேசவில்லை. புருவங்களை உயர்த்தி, கமண்டலுவின் பக்கம் காட்டினார். அனுமார் கமண்டலத்திற்குள் பார்த்தார். என்ன ஆச்சரியம்! ஆஞ்சனேயர் வைத்துச் சென்றதைப் போலவே ஆயிரக் கணக்கான முத்திரை மோதிரங்கள் கமண்டலத்திற்குள் காணப்பட்டன.

அதைக் கண்டதும் ஆஞ்சனேயர் சற்றுக் குழப்பத்துடன் முனிவரை நோக்கி, ''சுவாமி, இதில் காணப்படும் முத்திரை மோதிரங்களுள் நான் வைத்துச் சென்ற முத்திரை மோதிரம் எது?'' என்று கேட்டார்.

முனிவர் சிறிதும் பதற்றம் அடையவில்லை. அவர் பழையபடி தமது அதே புன்னகையுடன், ''குழந்தாய்! இராமாவதாரம் நடக்கும் காலங்களிலெல்லாம் சீதையை இராவணன் கவர்ந்து செல்வதும், பிறகு அனுமன் சீதையைக் கண்டு திரும்பும்போது முத்திரை மோதிரத்தை என் கமண்டலத்திற்குள் போடுவதும் வழக்கம். அத்தகைய மோதிரங்களைத்தான் நீ இப்போது கமண்டலத்திற்குள் பார்க்கிறாய்'' என்று பதில் சொன்னார்.

முனிவர் சொன்ன பதிலைக் கேட்டவுடனே அனுமனின் கர்வம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. வெட்கத்துடன் அவர் முனிவரிடம், ''சுவாமி! இதுவரையிலும் எத்தனை இராமர்கள் தோன்றியிருக்கிறார்கள்?'' என்று கேட்டார்.

முனிவர் அதற்குப் பதிலாக, ''குழந்தாய்! கமண்டலத்திலுள்ள முத்திரை மோதிரங்களை எண்ணினால் தெரியும்!'' என்றார். அனுமன் அவற்றை எண்ணிக் கணக்கிடுவது இயலாத காரியம் என்பதைப் புரிந்துகொண்டார்.

ஆஞ்சனேயர், ''என்னைப் போல எத்தனை எத்தனை பேர் இந்தக் காரியங்களைச் செய்திருக்கிறார்கள்! அவர்களைவிட நான் என்ன அப்படி அபூர்வமான காரியத்தைச் செய்து முடித்துவிட்டேன்?'' என்று எண்ணிக்கொண்டே அங்கதன் இருக்கும் இடத்தை அடைந்தார்.

பிறகு அங்கதனுடன் புறப்பட்டு இராமசந்திரமூர்த்தியைக் கண்டு வணங்கினார். ஆஞ்சனேயரின் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாகக் கொட்டியது. இராமபிரானை நோக்கி அவர், ''பிரபுவே! மிகப் பெரிய அபராதம் நடந்து

விட்டது'' என்று ஆரம்பித்து, முனிவரின் ஆசிரமத்தில் தமக்கு ஏற்பட்ட எல்லா அனுபவங்களையும் விவரமாக எடுத்துச் சொன்னார்.

முழுவதையும் கேட்டுவிட்டு இராமபிரான் நகைத்துக்கொண்டே கூறினார்: ''செல்வனே! முனிவரின் உருவத்தில் வந்து நான்தான் உன் நன்மைக்காக இந்த வேடிக்கையைச் செய்தேன். கலங்காதே, இதோ பார்'' என்றார். அங்கு அவருடைய கையில் ஆஞ்சனேயர் முனிவரின் ஆசிரமத்தில் விட்டு வந்த மோதிரம் ஒளி வீசிக்கொண்டிருந்தது.

கர்வம் நீங்கிய மாருதி இராமபிரானிடம் மகாவிஷ்ணுவின் முழுத் தோற்றத்தையும் கண்டார். உள்ளம் நெகிழ்ந்து, தடாலென்று தரையில் வீழ்ந்து பரம்பொருளை வணங்கினார்; நீண்ட நேரம் வரையிலும் அவர் எழுந்திருக்கவே இல்லை. அதன் பிறகு எந்த நிலையிலும் அனுமனின் உள்ளத்தில் கர்வம் தோன்றவே இல்லை.

[ஆனந்த ராமாயணம்]

பிரம்மசாரியின் காற்று

நாட்டறம்பள்ளியில் புதிய இராமகிருஷ்ண மடம், ஆலயம் திறப்புவிழாவுக்குக் 'கலைமகள்' ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் அழைக்கப்பட்டிருந்தார்.

அன்று பகலுணவுக்குப் பிறகு புதிய கட்டடத்தின் மேல்மாடியில் இருந்த ஒரு ஹாலில் கி. வா. ஜ. அவர்களும், சென்னை இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த ஒரு பிரம்மசாரியும் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார்கள். வெயில் காரணமாக ஒரே புழுக்கம். புதிய கட்டடமாக இருந்ததனால் வெப்பம் சற்று அதிகமாகவே இருந்தது.

''அப்பாடா! ரொம்பவும் வெப்பமாக இருக்கிறதே!'' என்று கி. வா. ஜ. சொல்லிக்கொண்டிருந்த சமயத்தில், மின்சார விசிறியுடன் (Table fan) அங்கு ஓர் அன்பர் வந்தார். மின்சார விசிறியை இயக்கி ஒரு பக்கமாக வைத்தார். ''விசிறியைக் கொஞ்சம் முன்னாடி வைத்தால் நன்றாக இருக்குமே!'' என்றார் கி. வா. ஜ. விசிறியைக் கொண்டுவந்த அன்பர், ''பக்கத்திலேயே கீழ்மாடிக்கு இறங்கிப் போகும் வழி இருப்பதால், மற்றவர்கள் போக வர விசிறியின் ஒயர் (wire) தடையாக இருக்குமே!'' என்று தாழ்ந்த குரலில் பண்புடன் கூறினார்.

உடனே கி. வா. ஜ. தமக்குப் பக்கத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த மடத்துப் பிரம்மசாரியைப் பார்த்து, ''மின்சார விசிறி அந்த மூலையிலேயே இருந்து இயங்குவதும் ஒரு வகையில் நல்லதுதான்; மின்சார விசிறிக்கும் எனக்கும் இடையில் இருப்பவராகிய நீங்களோ மடத்தைச் சேர்ந்த பிரம்மசாரி; நானோ சம்சாரி; ஆதலால் பிரம்மசாரியின் மீது பட்டு வரும் காற்று, சம்சாரியாகிய என்மீது படட்டும்'' என்று நகைச்சுவையுடன் கூறினார்.



மனிதனும் கர்மவிதியும்

திருமதி கோகிலா காளஹஸ்தி

> சுவாமி கணேச்வரானந்தரின் கருத்துக் களைத் தழுவி எழுதிய கட்டுரை இது.

மனிதனுடைய சிந்தனை வளர வளர எல்லா வற்றிற்கும் காரண காரியங்களைத் தெரிந்து கொள்ள மனம் விரும்புகிறது. இவ்விதம் பல வித அறிவைத் தேடிப் பெறும் மனிதன், தன்னிடம் மறைந்துள்ள தெய்வத்தன்மையை எப்படி மலரச் செய்வது என்றும் ஆராய்ச்சி செய்கிறான்.

தன் வாழ்க்கையின் தன்மையை ஆராயும் மனிதன், தன் வாழ்க்கை எப்படி ஏன் துவங்கியது என்று கண்டறிய விரும்புகிறான். 'நான் ஏன் இந்த உலகில் இருக்கிறேன்? சில சந்தர்ப்பங்களில் நான் உதவியின்றித் தவிப்பதாக உணர்வது ஏன்? வாழ்க்கை என்று சொல்லப் படும் இந்த உடற் பிரயாணத்தை நடத்தும் பலவித முயற்சிகளினால் பெறக்கூடிய பயன் தான் என்ன?'—இவை போன்ற கேள்விகளுக்கு உரிய பதிலை அறிய விரும்புகிறான். அவன் தன் வாழ்க்கையில் அடுக்கடுக்காகத் துன்பங்களும் துயரங்களுமே நிறைந்திருக்கக் காண்கிறான். இந்தத் துன்ப துயரங்களுக்கெல்லாம் வேர் போல ஆதாரமாக இருப்பது எது என்று சிந்திக்கிறான். அதற்காக அவன் பல நூல்களைப் படிக்கிறான். தியானம் செய்ய முயலுகிறான்.

வாழ்க்கையை அது இருப்பது போலவே அப்படியே மேற்போக்காகப் பார்க்கும்போது, மனித இனமும் மற்ற உயிர்களும் மாபெரும் வரம்பற்ற ஆழ்கடலில் மிகமிகச் சிறிய படகில் மிதப்பதைப் போலத் தோன்றுகிறது. இந்தப் படகிற்குக் குறைபாடு எதுவும் இருப்பதாகவும் தெரியவில்லை. மக்களில் பெரும்பாலானவர்கள் இந்தக் கடலுக்கு வரம்பு என்ற ஒன்று இருக்கிறதா இல்லையா என்று எந்தவிதக் கேள்வியையும் கேட்பதில்லை.

அவர்கள் இந்தப் படகையே தங்களுடைய நிரந்தரமான சொந்த வீடு என்று நினைக்கின்றனர். அதிலுள்ள எல்லாவற்றையும் நுகர்ந்து இன்பமாக வாழ்வதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள், 'எப்போதுமே எல்லாமே நன்றாகத்தான் இருக்கும்' என்று நம்புகிறார்கள் போலும்! 'இந்தப் படகில்தான் எல்லாமே இருக்கிறது; இதிலேயே எல்லாம் அடங்கிவிடுகிறது' என்று நினைக்கிறார்களே!

வேறு ஒருவகையான மனிதன் இருக்கிறான். அவன் தன்னைச் சுற்றியுள்ளவற்றைப் பார்த்து, இந்தப் படகு எவ்வளவு பெரியது என்று அறிய விரும்புகிறான். அவன் ஒருவேளை தன் ஆராய்ச்சியில் படகின் ஓரத்திற்கும் வந்துவிடலாம். அந்த நிலையில், இப்போது தான் வந்திருக்கும் படகின் விளிம்பையும் கடந்து தன்னால் செல்ல இயலாது என்பதைக் காண்கிறான். அங்கு இருந்தபடியே சுற்றிலும் உள்ள முடிவற்ற வெட்டவெளியை நோக்குகிறான். கேள்விகள் பல, அவனது உள்ளத்தில் உதயமாகின்றன. ஆனால் அந்தக் கேள்விகளுக்குப் பதில் தரக் கூடியதாக எதையும் அவன் காணவில்லை.

ஒருவேளை அவன் வேறு படகுகளைக் கண்டு பிடிக்கலாம். அவை பெரியவையாயும் அதிக அளவில் வசதிகளைக் கொண்டவையாயும் இருக்கலாம்; அல்லது சிறியவையாயும் வசதி குறைந்தவையாயும் இருக்கலாம். அந்தப் படகுகளுடன் தொடர்பு கொண்டு பேச விரும்புகிறான். ஆனால் யாரும் அவனுக்குப் பதில் சொல்வதாக இல்லை. முடிவில் அவன் சிந்திக்கவும் தியானம் செய்யவும் ஆரம்பிக்கிறான். அவன் தனக்குள்ளாகவே ஆழ்ந்து மூழ்குகிறான். உள்முகமாகத் திரும்பி ஆழ்ந்து ஆழ்ந்து செல்லும் அவன் முடிவில் முற்றிலும் புதிதாகிய ஒன்றைக் கண்டுபிடித்து விடுகிறான். அது சதா சர்வகாலமும் தன்னுள் கோயில் கொண்டு விளங்குவதைக் கண்டுபிடித்துவிடு

கிறான். அந்த அனுபவம் அவனுடைய எல்லாப் பிரச்னைகளுக்கும் கேள்விகளுக்கும் தெளிவான பதிலைத் தந்துவிடுகிறது. அது காரணமாக அவன் முற்றிலும் வேறுபட்ட ஒரு மனிதனை மாறிவிடுகிறான்; ஒரு யோகியாக ஆகிவிடுகிறான். அவன் மனம் பாமர மக்களுக்குத் தெரியாத ஒரு புதிய உலகில் வாழ்கிறது.

இந்தச் சிறிய படகில் வாழ்ந்துகொண்டிருப்பவர்களை நாம் மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

முதல் வகையினர்—இந்த உலகில் வாழும் வாழ்க்கை மிகவும் இன்பகரமாக இருப்பதாகக் கருதுகிறார்கள். அவர்கள் பலவித நம்பிக்கைகளை உருவாக்கிக்கொண்டு மேலும் மேலும் இன்பங்களைப் பெறுவதற்காகப் பாடுபடுகிறார்கள். இதைத் தவிர வாழ்க்கைக்கு வேறு அர்த்தம் இருப்பதாக அவர்கள் கருதுவதில்லை.

ஆனால், உண்மையில் இவர்கள் தமது நிலையை உணராமல் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். வாழ்க்கையின் ஆழ்ந்த தத்துவத்தைப் புரிந்துகொள்ளாத இவர்களை, படகின் வரம்பை இன்னும் கண்டுபிடிக்காதவர்கள் என்று சொல்லலாம். ஆனால் விரைவிலோ சற்றுக் காலம் தாழ்ந்தோ நாளடைவில் இந்த வகையைச் சேர்ந்த மனிதன் தன் அறியாமையிலிருந்து விழித்துக்கொள்வான். அவனுடைய இந்த நிலையை 'முதல் கட்டம்' என்று சொல்லலாம்.

அடுத்து அவன் இரண்டாவது கட்டத்திற்கு வருகிறான். இந்தக் கட்டம் மிகவும் கடுமையானதுதான். ஏனென்றால், இந்தக் கட்டத்தில் கவலைகளும் பயனற்ற பொருள்களைத் தேடியலையும் முயற்சியும் நிறைந்திருக்கின்றன; இந்தக் கட்டத்தில் அவன் வாழ்க்கைப் படகின் வரம்புகளைக் கண்டுபிடித்துவிடுகிறான்.

அதாவது, உலகமாகிய இந்தப் படகு உடலுக்குத் தேவையான எல்லாவற்றையும் கொடுக்கக் கூடியதாக இருந்தாலும், அதன் உள்ளே அமர்ந்துள்ள தன் மன விருப்பங்களைப் பூர்த்திசெய்யக் கூடியதாக இல்லை என்பதை உணர்கிறான். மேலும், இந்தப் படகு காலத்தாலும் இடத்தாலும் காரண காரியங்களாலும் தன்னைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது என்பதையும் அவன் உணர்ந்துவிடுகிறான். அது காரணமாக அமைதியற்ற ஒருவிதச் சுகத்தை அனுபவிக்கிறான். இந்தப் பயணத்திற்கு என்ன அர்த்தம் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறான். 'என் உண்மையான இருப்பிடம் எது? நான் எங்கிருந்து வந்திருக்கிறேன்? நான் யார்? நான் இப்போது எதை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறேன்? இந்தப் பிரயாணத்தால் ஏற்படும் பயன் என்ன?' என்று தன்னைத் தானே கேட்டுக்கொள்ளும் நிலையை அடைகிறான்.

நமது அறிவு வளர வளர, பெரிய ஒரு பொறுப்பை நாம் உணர்கிறோம். நமது செயல்களுக்கு நாமே பொறுப்பு ஏற்றுக்கொள்கிறோம். 'நான் ஏன் குறைபாடுகளுடன் இருக்கிறேன்? நான் ஏன் வரம்புகளுக்கு உட்பட்டவனாக இருக்கிறேன்? வாழ்க்கையின் முடிவு எது? நான் எங்கே போய்க்கொண்டிருக்கிறேன்? நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன்? ஒரு வேளை எனது எல்லா விருப்பங்களும் பூர்த்தியாகிவிட்டால்! அடுத்து இருப்பது என்ன?' என்பவற்றையெல்லாம் அறிய விரும்புகிறோம். இத்தகைய சிக்கல்கள் மனிதனின் அறிவாற்றலைத் தாக்கும்போது சிந்தனை துவங்குகிறது. அதன் பயனாகப் பலவிதக் கருத்துக்கள் எழுகின்றன.

ஒரு குழந்தைக்கும் மற்றொரு குழந்தைக்கும் பல விதங்களிலும் வேறுபாடுகள் இருப்பதைப் பார்க்கிறோம். இந்த வேறுபாடுகள் இருப்பதற்கு என்ன காரணம்?

சில சிந்தனையாளர்கள், மக்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளுக்குப் பிறந்த சூழ்நிலை, பாரம்பரியம், கல்வி ஆகியவற்றைக் காரணங்களாகக் குறிப்பிடுகிறார்கள். பிறக்கும் மனிதன் தனக்குள் இருக்கும் இயல்புகளை வெளிப்படுத்தி வாழ்கிறான். பிறகு இறந்து போகிறான். அடுத்து அவனுக்கு என்ன நேர்கிறது? உயிரியல் நூல் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் மௌனம் சாதிக்கிறது.

ஓர் உயிர் என்பது, இதுவரையிலும் நம்மால் அளவில் நிர்ணயிக்கப்படாத ஆழ்ந்த நுட்பமான ஒரு சக்தியின் வெளித் தோற்றம் என்று முன்னேறிய சில விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். ஆகவே, எது சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறதோ அதுவே மனித வாழ்க்கையின் முடிந்த முடிவல்ல என்பதை அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

இரண்டு உயிரணுக்களின் சேர்க்கைதான் மனித வாழ்க்கை என்பதை விஞ்ஞானத்தால் நிரூபிக்க இயலவில்லை. எதுவுமே எஞ்சியிருக் காது என்றும் விஞ்ஞானிகளால் கூற இயல வில்லை.

ஆகவே, 'வாழ்க்கையின் முடிவுதான் எது? நான் இப்போது என்ன செய்துகொண்டிருக் கிறேன்? என் எல்லா விருப்பங்களும் நிறை வேறி விட்டால், அடுத்து இருப்பது என்ன?' என்றெல்லாம் மனித மனம் சிக்கல் நிறைந்த கேள்விகளை எழுப்பும் விஷயத்தில் நவீன விஞ் ஞானம் ஏதோ சில பதில்களைத் தருகிறது. ஆனால் அந்தப் பதில்கள் மனிதனின் மன தைத் திருப்திப்படுத்துவனவாக இல்லை.

மனித வாழ்க்கையைப் பற்றிய சிக்கலான கேள்விகளுக்குக் **'கர்மவிதி'** என்ற ஒரு கருத் தைப் பண்டைக் கால ஹிந்து தத்துவஞானி களும் யோகிகளும் கொண்டிருந்தார்கள்.

கர்மவிதியைப் பற்றி நாம் தெரிந்துகொள் வதற்கு முன்பு, முதலில் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான கருத்து: **'ஆத்மா பிறப் பற்றது;** அது நிரந்தரமானது; ஆரம்பமும் முடிவும் இல்லாதது; சில சூழ்நிலைகளுக்கும் வரம்புகளுக்கும் ஆத்மா கட்டுப்பட்டிருப்ப தாகக் காணப்படுவது வெளித் தோற்றம் மட்டுமே ஆகும். உண்மையில் ஆத்மா எதனு லும் எந்த நிலையிலும் கட்டுப்படுத்த இயலா தது. வரம்பற்ற அது, வரம்புகளுக்கு உட் பட்டதாகவும் குணங்களுக்கு உட்பட்டதாக வும் தோற்றம் அளிக்கிறது. இவை ஆத்மா வின் மேல் சுமத்தப்பட்டிருப்பன போலக் காண்கின்றனவே தவிர, இந்தத் தன்மைகள் ஆத்மாவிற்கு உரிய உண்மையான இயல்புகள் அல்ல' என்பதே. **[தொடரும்]**

ஸ்ரீராமர்—கிருஷ்ணர் அர்ச்சனைப் பிரசாதம்

சகல செளபாக்கிய சம்பத்துகளையும் அளிக்க வல்ல க்ஷேமலாபயோக நாமாவான சிந்தா மணி பீஜ ஜபம் 'ஓம் ஹ்ரீம் காசி விச்வராஜ நம:' என்பது.

ஓம் : பிரணவப் பொருள்
ஹ்ரீம் : சக்தி தத்துவம்
கா : காமதேனு
சி : சித்தேச்வரர்
வி : விக்னேச்வரர்

ச் : சுப்பிரமணியர்
வ : வரலட்சுமி
ரா : ராஜயோக தரிசனம்
ஜ : சந்திரலோகப் பிராப்தி
நம:—நமஸ்காரம்

'ஓம் ஹ்ரீம் காசிவிச்வராஜ நம:' என்னும் மகாமந்திரத்தை 1008 முறை எழுதி, சுய விலாசம் குறிப்பிடப்பெற்ற கவருடன் எங்களுக்கு அனுப்புவோர் அனைவருக்கும், அவர்கள் பெயரில் ஸஹஸ்ரநாம அர்ச்சனை செய்து அன்பளிப்பாக அர்ச்சித்த அருள்மிகு அஷ்டலக்ஷ்மி குங்குமம், விபூதி, சந்தனம், அட்சதை முதலிய திவ்வியப் பிரசாதங்கள் அனுப்பி வைக்கப்படும். பக்த கோடிகள் காலவரையின்றி எப்போது வேண்டுமானாலும் எழுதியனுப்பி இறைவனின் திருவருள் கடாட்சமான அனுக்கிரகங்களை அடைந்து அனுபவித்து இன்புறுவீர்களாக.

'சந்திராலயம்'
34, தட்டாரத் தெரு, கடப்பேரி,
மதுராந்தகம்—603306
செங்கை மாவட்டம்.

விக்கிரமாதித்தனின் விசித்திர சிம்மாசனம்

ஆர். நிவேதிதா எம். ஏ.

மாடு மேய்க்கும் பையனால் அந்த விசித்திரச் சிம்மாசனத்தில் உட்கார முடிந்தது. ஆனால் நாடாளும் மன்னனால் அதைச் செய்ய முடியவில்லை. இருபத்தைந்து தேவதைகளும் அரசனுக்கு அறிவுரை வழங்கின.

பண்டைக் காலத்தில் உஜ்ஜயினி நகரம் இயல் இசை நாடகம் ஆகிய துறைகளில் புகழுடன் விளங்கியது. அந்த நகரத்தில் புகழ் பெற்ற கலைஞர்களும் காளிதாசன் போன்ற கவிஞர்களும் தோன்றினார்கள்.

ஒரு சமயம் உஜ்ஜயினி நகரத்தை விக்கிரமாதித்தன் என்ற அரசன் ஆண்டு வந்தான். குடிமக்களிடம் அவனுக்கு ஆழ்ந்த அன்பு இருந்து வந்தது.

விக்கிரமாதித்தன் நீதிநெறி தவறாமல் செங்கோல் செலுத்தினான். அநீதிக்கே இடம் இல்லாத வகையில் அவனது ஆட்சி நடைபெற்று வந்தது.

தன் அரசவைக்கு வழக்குகளைக் கொண்டு வந்தவுடன் விக்கிரமாதித்தன் வழக்குக்காரர்களை நிமிர்ந்து நோக்குவான்; குற்றவாளிகள் அரசனின் பார்வைக்குப் பயந்து, குற்றத்தைத் தாமாகவே ஒப்புக்கொள்வார்கள்; பிறகு அங்கே விக்கிரமாதித்தன் தீர்ப்புக் கூறுவதற்கே இடமில்லாமற் போய்விடும்.

விக்கிரமாதித்தனிடம் மக்கள் அன்பும் மதிப்பும் கொண்டிருந்தார்கள். அத்தகைய அரசனின் ஆட்சி, காலவெள்ளத்தில் அழிந்து போயிற்று. அரசனின் அரண்மனை இருந்த இடத்தில் மண்மூடிப் புல்பூண்டுகள் முளைத்துப் பசுமையாகக் காட்சியளித்தன. உஜ்ஜயினி நகரத்தின் விண்ணை முட்டும் மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் தரையோடு தரையாகப் பரந்த புல்வெளியாக மாறின.

அந்தப் புல்வெளிகளில் சுற்றுப்புறக் கிராமங்களிலுள்ள இடைச்சிறுவர்கள் தங்கள் ஆடு மாடுகளைக் கொண்டுபோய் மேய்ப்பது வழக்கம். காலையில் ஆடுமாடுகளைப் புல்வெளிகளில் மேய்க்க விட்டுத் தங்களுக்குள்ளேயே அவர்கள் விளையாடிக்கொண்டிருப்பார்கள். மாலையில் பொழுது சாய்ந்ததும் கால்நடைகளுடன் ஊர் திரும்புவார்கள்.

ஒரு நாள் வழக்கம்போல் இடைச்சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென்று ஒரு சிறுவன் புல்வெளிகளுக்கிடையே உயர்ந்திருந்த ஒரு மேட்டை நோக்கி ஓடினான். அந்த மேட்டின் மீது சிரமப்பட்டு ஒருவழியாக ஏறி உட்கார்ந்துகொண்டான். பிறகு அவன் தன் கையில் இருந்த மாடு மேய்க்கும் குச்சியை ஆட்டிக்கொண்டே, ''இப்போது இங்கே நான்தான் நீதிபதி. நீங்கள் எல்லோரும் உங்கள் வழக்குகளை என்னிடம் கொண்டு வாருங்கள்'' என்று கம்பீரமாகக் கூறினான்.

அவனுடைய மற்றத் தோழர்களுக்குத் தங்கள் நண்பனின் செய்கை புதுமாதிரியான விளையாட்டாகத் தோன்றியது. எனவே தங்களுக்குள்ளாகவே அவர்கள் சிறுசிறு சண்டைகளைப் போட்டுக்கொண்டு 'நீதிபதி'ப் பையனின் முன்பு தங்கள் வழக்குகளைக் கொண்டுவந்தனர்.

ஒரு பையன் விளையாட்டாக, ''நீதிபதி அவர்களே, இவன் என்னிடம் தகராறு செய்கிறான். நீங்கள்தாம் வழக்கை விசாரித்துச் சரியானபடி எங்களுக்குத் தீர்ப்பு வழங்க வேண்டும்'' என்று பணிவாகச் சொல்வதைப்போலத் தெரிவித்துக் கொண்டான்.

நீதிபதிப் பையன் வழக்கைக் கேட்டுவிட்டுச் சிந்தித்தான். கட்சிக்காரர்களாகிய இரண்டு பையன்களையும் உற்று நோக்கினான். பிறகு கம்பீரமான குரலில், அனுபவம் வாய்ந்த பெரிய ஒரு நீதிபதியைப் போலவே ஒவ்வொரு வார்த்தையாக அளந்து பேசித் தீர்க்கமாக முடிவு வழங்கினான்.

அப்போது அவனுடைய பேச்சும் பாவனைகளும் சாதாரண இடைச்சிறுவனுக்கு உரியவை

யாகவே இல்லை! இதைக் கண்ட மற்றப் பையன்கள் மிகவும் ஆச்சரியப்பட்டனர். என்ருலும் இப்படியே அவர்களுடைய விளை யாட்டு அன்றைத் தினம் பல முறையும் நீடித் தது.

பிறகு நாள்தோறும் காலைமுதல் மாலைவரை யிலும் பையன்கள் இந்த நீதிபதி விளையாட்டில் மகிழ்ச்சியுடன் ஈடுபட்டனர். பொழுது போக் குக்காக விளையாடினுலும் மற்றப் பையன் களுக்கு, நீதிபதிப் பையனின் விசாரணை முறை யும் அவன் தீர்ப்பு வழங்கும்போது பேசும் முறையும் மிகுந்த வியப்பை அளித்து வந்தன.

நீதிபதியாகிய இடைச்சிறுவன் மேட்டின் மீது ஏறி உட்காரும் வரையிலும், மற்றப் பையன்களைப் போலவே சாதாரணமாகப் பேசி யும் பழகியும் வந்தான். மேட்டின் மீது ஏறி உட்கார்ந்து நீதிவிசாரணை செய்ய ஆரம்பித்து விட்டாலோ, உடனே அவனது பார்வை, பேச்சு, செயல் ஆகிய எல்லாமே முற்றிலும் மாறிப் போய்விடும். அந்த நிலையில் மிகவும் படித்த சிந்தனையாற்றல் மிக்க பேரறிஞனைப் போலக் காணப்படுவான்.

இடைச்சிறுவர்களின் சாதாரண விளையாட் டுச் சண்டைகளை உண்மையான மிகப் பெரிய வழக்குகளை விசாரிப்பது போலவே நீதிபதிப் பையன் விசாரித்துத் தீர்ப்பு வழங்கினுன். இந்தச் செய்தி சிறிது சிறிதாகச் சுற்றுப்புறக் கிராமத்து மக்களிடையே பரவியது.

நாளடைவில் கிராம மக்களுங்கூடத் தங்க ளுடைய உண்மையான வழக்குகளை நீதிபதிப் பையனிடம் கொண்டுவர ஆரம்பித்தார்கள். அவர்களுக்கும் அந்த இடைச்சிறுவன் அதே மேட்டின் மீது ஏறி உட்கார்ந்து சரியான தீர்ப்பு வழங்கினுன். வழக்குகளைக் கொண்டு வரும் இரண்டு தரப்பினருக்கும் 'நீதிபதிப் பையனின் தீர்ப்பே பொருத்தமானது' என்று தோன்றும்.

இந்தச் செய்தி கொஞ்சம் கொஞ்சமாக அந்த நாட்டு அரசனின் காதுக்கும் எட்டியது. அரசன் ஒரு நாள் விளையாட்டுப் போக்கில் தன் அமைச்சர்களிடம், ''ஒருவேளை அந்தப் பையன் விக்கிரமாதித்தனின் நீதி ஆசனத்தின் மீது உட்கார்ந்து கொண்டிருக்கிருனே என் னவோ!'' என்று சொன்னுன்.

'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்னும் மறைமொழியை உணர்ந்த அமைச் சர்கள், 'அரசன் விளையாட்டுப் போக்கில் சொன்னதிலும் உண்மை இருக்கக்கூடும்' என்று நினைத்தார்கள்.

அந்த எண்ணத்துடன், அமைச்சர்கள், ''அரசே! அந்தப் பையன் நீதி வழங்கும் அதே இடத்தில்தான் ஒரு காலத்தில் சக்கரவர்த்தி விக்கிரமாதித்தனின் அரண்மனைகளும் நீதிமன் றங்களும் இருந்திருக்கின்றன'' என்று சொன் ஞர்கள். அதைக் கேட்ட அரசன், ''அப்படி யாளுல் உடனே அந்த இடத்தைத் தோண்டி, ஏதாவது கிடைக்கிறதா என்று பாருங்கள்'' என்று கட்டளை பிறப்பித்தான்.

அதன் விளைவாக, அதுவரையிலும் அழகும் அமைதியும் ததும்பும் புல்வெளியாக இருந்த இடம் எங்கே பார்த்தாலும் வெட்டப்பட்டு மேடும் பள்ளமுமாக, கோரமான காட்சி யளிக்கத் தொடங்கியது.


புல்வெளிகள் அழிக்கப்பட்டதால் ஆடு மாடுகளை மேய்க்க முடியாமல் இடைச்சிறுவர் பெரிதும் வருந்தினர். ஆனுல் நீதிபதிப் பையனுக்கு மட்டும் அந்த மேட்டைப் பார்க்கப் பார்க்க அழுகையாக வந்தது. ஏதோ தன் உயிரையே எடுத்துக்கொண்டு போவதைப் போன்ற துன்பத்தில் அவன் துடிதுடித்தான்.

மற்ற எல்லா இடங்களையும் வெட்டிப் பார்த்து ஒன்றுமே கிடைக்காத நிலையில், அரண்மனை வீரர்கள் அந்த மேட்டை வெட்ட ஆரம்பித்தார்கள். நீதிபதிப் பையனின் கண் களிலிருந்து நீர் தாரைதாரையாகப் பெருகி யது. மனவருத்தத்துடன் பேச முடியாமல் அவன் அந்த இடத்தையே மௌனமாகப் பார்த்தபடி நின்ருன்.

வீரர்கள் மேட்டை வெட்ட வெட்ட, அங்கே ஓர் அழகிய கறுப்புப் பளிங்குக் கல்லினுல் ஆகிய பலகை போன்ற ஒன்று தென்பட்டது. மேலும் ஆழமாக வெட்டிப் பளிங்குக் கல்லை வெளியே எடுத்தார்கள். அந்தப் பளிங்குக் கற் பலகையை இருபத்தைந்து தேவதைகளின் கற் சிலைகள் தாங்கிய நிலையில் காட்சி தந்தன. தங்கள் கைகளால் பலகையைத் தூக்கிப் பிடித் துக்கொண்டு, சிறகுகளை விரித்து அந்தத் தேவ

தைகள் வானத்தை நோக்கிப் பறக்கத் தயா ராக இருப்பதைப் போன்ற நிலையில் ஆகா யத்தை நோக்கிப் பார்த்தபடி இருந்தன.

அந்தப் பலகைதான் விக்கிரமாதித்த மன்ன வின் நீதி ஆசனம். அந்தச் சிம்மாசனத்தைப் பார்த்ததுமே குழுமியிருந்த மக்கள் அனைவரும் குதூகலித்தனர். மகிழ்ச்சியும் ஆரவாரமும் பொங்கச் சிம்மாசனத்தைத் தங்கள் நாட்டு அரசனின் அரண்மனைக்கு எடுத்து வந்தார்கள். அரசன் அதைத் தன் நீதிமண்டபத்தின் முக்கிய மான ஓர் இடத்தில் வைக்கும்படி கட்டளை யிட்டான்.



அரசன் அந்த நீதி ஆசனத்தில் அமர்வதற் காக மூன்று நாட்கள் விரதம் இருந்து கடவுளி டம் பிரார்த்தனை செய்தான். பிறகு செய்ய வேண்டிய மற்ற எல்லாச் சடங்குகளையும் முறையாகச் செய்துவிட்டு, மந்திரி பிரதானி களோடும் வீரர்களோடும் சிம்மாசனத்தில் உட்காருவதற்காக வந்தான். குழுமியிருந்த மக்கள் நீதி ஆசனத்தில் அரசன் அமரும் காட்சி யைக் காண ஆவலுடன் காத்திருந்தார்கள்.

அரசன் கம்பீரமாக ஒரு முறை எல்லோரை யும் வணங்கினான். பின்னர் ஆசனத்தின் அரு கில் சென்று, அதையும் ஒரு முறை வணங்கி விட்டு மிகவும் பெருமிதத்துடன் அதில் அமரச் சென்றான்.

உடனே அந்த இருபத்தைந்து தேவதைகளி லிருந்து ஒரு தேவதை அரசனைப் பார்த்து, ''அரசனே, நில்! விக்கிரமாதித்தனின் நீதி ஆசனத்தின் மீது நீ உட்காராதே!'' என்று சொன்னது.

எல்லோருக்கும் ஒரே வியப்பு. அரசன் அதிர்ச்சியும் ஆச்சரியமும் கொண்டவனாக அந்தத் தேவதையை ஏறிட்டு நோக்கினான். அது அரசனைப் பார்த்து, ''உனக்கு இந்த நீதி ஆசனத்தின் மீது அமரும் தகுதி இருக்கிறதா என்று யோசித்துப் பார். நீ உனக்குச் சொந்த மில்லாத மற்ற அரசர்களுடைய நாடுகளைக் கைப்பற்ற ஆசைப்பட்டது உண்டா இல்லையா?'' என்று கேட்டது.

தேவதை அவ்விதம் கேட்டு முடித்ததும் அரசனின் உள்ளத்தில் ஒருவிதப் பிரகாசமும், அதைத் தொடர்ந்து அவனுடைய பழைய செயல்களும் நினைவுக்கு வந்தன. ''ஆம், நான் எனக்குச் சொந்தமில்லாத மற்ற நாடுகளைக் கைப்பற்ற ஆசைப்பட்டதுண்டு; கைப்பற்றியும் இருக்கிறேன்'' என்று தனக்குத் தானே சொல் லிக்கொண்டான். நீண்ட சிந்தனைக்குப் பிறகு அரசன் தலைகுனிந்தபடியே தேவதையிடம், ''இல்லை, எனக்கு விக்கிரமாதித்தனின் நீதி ஆசனத்தின் மீது அமரும் தகுதியில்லை'' என்று தன் நிலையை ஒப்புக்கொண்டான்.

அதற்கு அந்தக் கல்தேவதை, ''நீ இன்னும் மூன்று நாள் உண்ணாவிரதம் இருந்து கடவு ளிடம் பிரார்த்தனை செய். அதன் பிறகு தூய உள்ளத்துடன் இந்த நீதி ஆசனத்தில் உட் காரும் தகுதியுடன் வா'' என்று சொல்லி விட்டு வானத்தை நோக்கிப் பறந்தது. தேவதை சொன்னதைக் கேட்டவுடன் அரசன் நிமிர்ந்து ஆசனத்தைப் பார்த்தான். அதுவரை யிலும் அரசனிடம் பேசி வந்த தேவதை இருந்த இடம் காலியாகக் காட்சி தந்தது.

அரசன் மீண்டும் மூன்று நாள் விரதம் இருந்து, பிரார்த்தனை செய்துவிட்டு, மிகுந்த பயபக்தியுடன் வந்தான். அவன் விக்கிரமாதித் தனின் ஆசனத்தில் அமரப் போகும் தறுவாயில் மற்றொரு கல்தேவதை அவனைப் பார்த்து, ''நில்! உட்காராதே! மற்றவர்களின் செல்வத் திற்கு ஆசைப்பட்டு அதைக் கைப்பற்ற நினைத் ததுண்டா, இல்லையா?'' என்று கேட்டது.

அரசன் சிந்தித்தான்: 'எனக்குச் சொந்த மில்லாத பிறர் சொத்துக்களின் மீது ஆசைகொண்டு நான் கொள்ளையடிக்க நினைத்ததுண்டு; கொள்ளையடித்தும் வந்திருக் கிறேன். அது காரணமாகப் பலரை நான்

துன்பத்தில் ஆழ்த்தியிருக்கிறேன்' என்று நினைத்தான்.

மறுகணமே அந்தக் கல்தேவதை, ''அப்படியானால் நீ இந்தச் சிம்மாசனத்தின் மேல் அமரத் தகுதி இல்லாதவன். மேலும் மூன்று நாள் நீ விரதம் இருந்து பக்தியுடன் பிரார்த்தனை செய்துவிட்டு இங்கே வா!'' என்று தெரிவித்த பின்பு வானிலே பறந்து சென்றது.

இது போலவே இருபத்துநான்கு தேவதைகளும் வானத்தை நோக்கிப் பறந்து சென்றுவிட்டன. அரசன் அந்தத் தேவதைகள் கூறியபடியே விரதம் இருப்பதும் பிரார்த்தனை செய்வதுமாக வாழ்ந்து, காமம் குரோதம் மதம் மாச்சரியம் ஆகிய தீய குணங்களிலிருந்து சிறிது சிறிதாக விடுபட்டு, இறுதியில் ஒரு நாள் அந்த ஆசனத்தின் மீது அமர்வதற்கு வந்தான்.

இப்போது அவனிடம் முன்பு இருந்த அளவுக்கு அகங்காரம் அதிகம் இல்லை. 'நான்தான் எனது பழைய தீய குணங்களை விட்டுவிட்டேனே; இப்போதாவது இந்த ஆசனத்தில் உட்காரக்கூடிய தகுதி எனக்கு வந்துவிட்டதா பார்க்கிறேன்; இன்றைய தினம் நிச்சயம் விக்கிரமாதித்தனின் ஆசனத்தில் உட்காரத்தான் போகிறேன்' என்று நினைத்துக்கொண்டே அரசன் வந்தான். ஆனால் அதே சமயம் அவனுடைய உள்ளத்தில், 'இன்னும் என்ன என்ன கெட்ட குணங்கள் என்னிடம் இருக்கின்றனவோ?' என்ற சிந்தனை எழுந்ததனால் பயம் வேறு அவனை வாட்டியது.

அரசன் வழக்கம்போல் ஆசனத்தை வணங்கிவிட்டு உட்காரும் தறுவாயில், எஞ்சியிருந்த இருபத்தைந்தாவது தேவதை, ''அரசனே, நில்! நீ என்ன முற்றிலும் தூய உள்ளம் கொண்டவனாகவா இருக்கிறாய்? உன்னிடம் அந்த இடைச்சிறுவனுக்கு இருப்பதைப் போன்ற தூய உள்ளம் இருக்கிறதா? 'நான், எனது' என்ற எண்ணங்களிலிருந்து நீ விடுபட்டுவிட்டாயா?'' என்று கேட்டது.

வியப்பும் அதிர்ச்சியும் உந்த அரசன் சற்றுப் பின்வாங்கினான். ''இல்லை, இல்லை; இந்த ஆசனத்தில் அமரக்கூடிய தகுதி எனக்கு இல்லவே இல்லை!'' என்று தனக்குத் தானே சொல்வது போல முணுமுணுத்தான்.

மறு விநாடியே அந்தக் கடைசித் தேவதை விக்கிரமாதித்தனின் நீதி ஆசனத்தைத் தூக்கிக்கொண்டு வானத்தை நோக்கிப் பறந்தது.

அரசன் சிந்தனையில் ஆழ்ந்தான்: 'விரதங்கள் இருந்து படிப்படியாக நான் எவ்வளவு உயர்ந்து வந்தேன்! எவ்வளவு போராடித் தீய குணங்களிலிருந்து விடுபட்டேன்! என்றாலும் அந்த இடைச்சிறுவனுக்கு இருப்பதைப் போன்ற தூய உள்ளத்தை நான் பெறவில்லையே! 'நான்', 'எனது', 'அரசன்' ஆகிய ஆணவங்களிலிருந்து நான் விடுபடவில்லையே! எவ்வளவுதான் கல்வி கேள்விகளில் சிறந்திருந்தாலும், பல ஆற்றல்களைப் பெற்றிருந்தாலும், நீதி வழங்குவதற்கு அவை போதா; விருப்பு, வெறுப்பு, ஆசை, கோபம் போன்ற உள்ளத்தின் மாசுகள் நீங்கப்பெற்ற நிலையே வேண்டும்.'

அரசனின் ஆணவம் அழிந்தது. இனிமேலாயினும் தன் ஆட்சியில் நீதி வழங்குவதற்கேற்ற தூய மனநிலையைப் பெறுவது என்று அவன் உறுதி செய்துகொண்டான்.



ஒரு காரியத்தைத் தாமதிப்பதனால் என்ன நன்மை இருக்கிறது? இரும்பு சூடாக இருக்கும்பொழுதே அதை அடித்து உருவாக்க வேண்டும்.

—**டிக்கன்ஸ்**

அதிதிகளுக்கு அன்னமிட்டும், ஒருவரிடமும் பொறாமை கொள்ளாமலும், தர்மநூல்களைப் படித்துக்கொண்டும் இருப்பவர்களுக்குக் கஷ்டங்கள் விலகும்.

—**பீஷ்மர், மகாபாரதம்**

திருவருள் ஆற்றல் உலகத்தை வாழ்விக்கிறது. உலகம் இயங்குவது திருவருளால். அருள் இன்றேல் யாதொரு பொருளும் அசைவதில்லை. அருள் இருந்தால் அணுவளவான பொருளும் அண்டசராசரங்களாகிவிடும்.

—**ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி**

ஆன்மிக உரையாடல்

சுவாமி துரியானந்தர் :: தமிழாக்கம்: **ரா. கணபதி**

1919 அக்டோபர் 9

சுவாமி துரியானந்தர் தமது அறையின் வராந்தாவில் ஒரு சாய்மான நாற்காலியில் படுத்திருந்தார். ஒரு பிரம்மசாரி அவருக்கு விசிறிக்கொண்டிருந்தார். பல ஆண்டு புரிந்த கடும் விரதங்களும் ஆன்மிகச் சாதனைகளும் சுவாமி துரியானந்தரின் ஆரோக்கியத்தைச் சிதைத்துவிட்டிருந்தன. நீரழிவு நோய் இந்த ஆரோக்கியவீனத்தைப் பூரணமாக்கிவிட்டது. எனவே அவர் ஒரு மாறுதலுக்காக வாரணாசி (காசி)க்கு வரவேண்டியதாயிற்று.

> சுவாமி துரியானந்தர் வாரணாசியில் உள்ள இராமகிருஷ்ண மிஷன் சேவாச்ரமத்தில் தங்கியிருந்தபோது நடைபெற்ற உரையாடல் இது.

'சி' என்பவரோடு சீடர் வந்தார். சி-சுவாமி துரியானந்தரை வணங்கியபின் அவரது உடல் நிலைபற்றி விசாரித்தார்.

சுவாமி: தற்போது நான் வெகு நன்றாகவே இருக்கிறேன். இங்கு நான் வந்தவுடன் அடுத்தடுத்து இரு முறை இன்ஃப்ளூயென்ஸா தாக்கியது. இது என்னை மிகவும் பலவீனப்படுத்திவிட்டது. அதிருஷ்டவசமாக, கல்கத்தாவில் எனக்குச் சிகிச்சை செய்த டாக்டர் எஸ். அப்போது வாரணாசிக்கு ஏதோ காரியமாக வந்திருக்க நேர்ந்தது. என்னைப் பார்த்தவுடன் அவர், வாரணாசிக்கு இடம் மாறியதால் பலன் இராமற் போகலாம் என்றார். அந்தச் சமயத்தில் என் பழைய ஆஸ்த்மாவின் அடையாளங்கள் வேறு தோன்றியிருந்தன.

சீடர்: (துர்க்கா வழிபாட்டின் இரண்டாவது நாளான) அஷ்டமி பூஜா தினத்தில் இருந்ததை விடத் தாங்கள் அதிக ஆரோக்கியமாகக் காண்கிறீர்கள். இடமாற்றத்தின் பலன் உடனடியாகத் தெரிவதைவிட, படிப்படியாகத் தெரிவதே நல்லது என்று நினைக்கிறேன். சுவாமி பிரேமானந்தர் தியோகருக்குச் சென்றபோது, தொடக்கத்தில் மிகவும் அபிவிருத்தி அடைந்தார். ஆனால் அந்த அபிவிருத்தி நிலைத்து நிற்கவில்லை.

சுவாமி: ஆம். அவரைக் கல்கத்தாவுக்குக் கொண்டு வந்தது ஒருகால் தவறாக இருந்திருக்கலாம். போகிற வழியிலேயே அவருக்கு இன்ஃப்ளூயென்ஸாவும், அதோடு கூட டபிள் நிமோனியாவும் உண்டாகிவிட்டன. கல்கத்தாவை அவர் சேர்ந்தவுடன் சுவாமி சாரதானந்தர், 'அவரைத் தீர்த்துக் கட்டியாச்சு' என்றார். அவர் இறந்தது அவரது பழைய நோயால் அல்ல.

சி: மகராஜ், நாங்கள் உலகியலிலேயே முற்றும் முழுகியுள்ளோம் எனத் தாங்கள் நன்கு அறிவீர்கள். நாங்கள் எப்படி இறைவனை சாட்சாத்கரிக்க முடியுமென்று தயைகூர்ந்து தெரிவியுங்கள்.

சுவாமி: இறைவனை அடைய நிர்ணயமான (ஒரே) வழி இருக்கவில்லை.* 'பல பூர்வ ஜன்மங்களில் ஈட்டிய புண்ணியவசமாகத்தான் ஒருவன் மனப்பூர்வமாக ஒழுக முடியும்' என்பார் ஸ்ரீராமகிருஷ்ணர். 'குறிப்பிட்ட விலையைத் தந்து இறைவனை வாங்கிவிட, அவன் ஏதோ மீனைப் போலவும், காய்கறி போலவும் ஒரு சரக்கல்ல' என்று சுவாமிஜி (விவேகானந்தர்) நயம்படச் சொல்லியிருக்கிறார். முனிவர்கள் சாஸ்திரங்களில் தாங்கள் இறைவனைச் சென்று சேர்ந்த பல வழிகளைக் கூறியுள்ளனர். ஒரு முனிவர் இன்ன இன்ன முறையில் பூஜை செய்ய வேண்டும் என்கிறார். இன்னொரு முனிவர் ஜபம் செய்ய வேண்டும் என்கிறார். இப்படிப் பல.

'நதியானது தன் கதியைச் சற்றும் திசை திருப்பாமல் ஒரே நோக்காகக் கடலைச் சந்திக்கவே பாய்வது போல, இறைவனைத் தேடுகிறவனும் மற்ற எல்லா விசாரங்களையும் விடுத்து அவனே நினைவாக அவனை நோக்கிச் செல்ல வேண்டும்' என்று நாரதர் சொல்கிறார். 'வேறு எதிலும் பற்றின்றி என்னையே எவர் உற்சாகத்தோடு உபாசிக்கிறார்களோ, அவர்களுக்குத் தேவையானதைத் தந்தும்,

*எவ் வழியாயினும் அதில் மனப்பூர்வமாகச் சென்றால் இறைவனை அடையலாம் என்பது இங்கு தொக்கு நிற்கிறது.

—மொழிபெயர்ப்பாளன்

அவர்களிடம் ஏற்கனவே உள்ளதைக் காத்தும் நான் யோக-க்ஷேமம் தாங்குகிறேன்' என்று கீதையில் பகவான் சொல்லியிருக்கிறார்.

பக்தியில் இரண்டு வகை உண்டு. முதல் வகை—சடங்குப்படி, செய்தேயாக வேண்டும் என்ற விதியாக, இத்தனை தடவைகள் ஜபிக்க வேண்டும், இன்ன இன்ன கிரமத்தில் பூஜை செய்ய வேண்டும் என்கிற பக்தி. இரண்டாம் வகை-பிரேமைமயமான பக்தி. இந்த நிலையில் பக்தன் பகவானையே ஆர்வமுறச் சிந்திக்கிறான். இறைவனுக்குத் தொடர்பற்ற விஷயங்களில் இந்தப் பக்தனுக்குச் சற்றும் இன்பமில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, விடாமுயற்சி அவசியமாகும். சிறிது அப்பியாஸம் செய்ததில் விரும்பிய பலன் உண்டாகவில்லை என்பதால் முயற்சியை விடுவது தகாது. ஒருவர் தீவிரச் சாதனையில் ஈடுபட்டிருந்தபோது அவரைச் சுற்றிப் புற்றே எழும்பிவிட்டது என்கிறார்கள்.

சி: மகராஜ், ஜபம் என்றால் உள்ளபடி என்ன?

சுவாமி: ஒருவன் பகவானின் நாமத்தைச் சொல்ல வேண்டும்; அதே சமயம் பகவானுடைய வடிவத்தைத் தியானிக்க வேண்டும், பகவானையே நினைக்க வேண்டும், அவனையே அன்பு செய்ய வேண்டும் என்பதுதான் ஜபத்தின் பொருள். மனம் உலகப் பொருள்களைப் பற்றியிருப்பின், வெறுமே பகவந்நாமாவை மட்டும் திரும்பத் திரும்பச் சொல்வதில் என்ன பயன்? ஸாரபூதமாகத் தேவைப்படுவது யாதெனில், எவ்வாறாயினும் நாம் அவனை நம்மவனாகவே சொந்தமாக்கிக் கொள்வதுதான்.

சீடர் : ஸ்ரீராமகிருஷ்ணர் கூறினாற் போல், 'வாயிற்காப்போனுடன் போர் புரிந்தாகிலும், சுவர் ஏறிக் குதித்தாகிலும், எவ்வகையிலாயினும் நீ வீட்டு யஜமானனைப் பிடித்தாக வேண்டும்'.

சம்சாரம் என்ற கடுஞ்சாலையில் சத்தியம்தான் கட்டுச்சோறு.

—**ஒரு சம்ஸ்கிருத சுலோகம்**



ஈசன் நினைத்தால் விஷமும் அமிருதமாகும். அமிருதமும் விஷமாகும்.

—**மகாகவி காளிதாசர்**


மனிதன் பிறக்கும்போது, தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் பித்ருக்களுக்கும் மக்களுக்குமாக நான்கு வகைகளில் கடன்பட்டிருக்கிறான். ஆண்டவன் கொடுக்கும் பொருளைத் தனது என்று கருதாமல் தேவர்களுக்கு அர்ப்பித்து வேள்விகளைச் செய்வதால் தேவர்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் தீருகிறது. வேதமாகிய செல்வத்தைப் பயிலுவதாலும் காப்பாற்றுவதாலும், ரிஷிகளுக்குச் செலுத்த வேண்டிய கடன் தீருகிறது. இல்லறத்தில் நல்லறம் புரிந்து நல்ல மக்களைப் பெறுவதால், பித்ருக்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் தீருகிறது. மக்களுக்கு உடையும் உணவும் அளித்துக் காப்பதனால், வாழ்க்கை பயனுள்ளதாகிறது. இவ்விதம் நான்கு கடமைகளையும் நிறைவேற்றியவன், உலகிலுள்ள அனைத்தையுமே பெற்றவனாகிறான்.

— **சதபதப் பிராம்மணம், 1-7-2**

கற்றவர் என்பவர் யார்? கற்றபடி நிற்பவரே. —**முகமது நபி**

சத்தியத்தினால் புனிதமாக்கப்பட்ட பேச்சே பேசவேண்டும். உள்ளத்தால் புனிதமானது என்று உணர்ந்த காரியத்தையே செய்யவேண்டும். —**பத்ம புராணம்**

எனக்குக் கேடு விளைவிப்பவன் என்னையன்றி வேறெவனும் இலன். என் குற்றமே எனக்குத் துன்பம் விளைவிப்பது. —**பெர்னார்டு ஷா**



பிரம்மசரிய சாதனம்

கவியோகி சுத்தானந்த பாரதியார்

''பிரம்மசரியத்தால் வீரியசக்தி மிகப் பெற லாம்''* என்பது பதஞ்சலி முனிவரின் திரு வாக்கு.

'இளமையில் பிரம்மசரியக் கல்வி, வயது வந்த பிறகு இல்லறம், முதுமையில் துறவு, இறுதியில் யோகத்தால் உடலை நீத்தல் — யோகேந அந்தே தநுத்யஜாம்' என்பது காளி தாசன் வாக்கு.

பிரம்மசரியக் கல்விதான் மனித வாழ்க்கை யின் ஆணிவேர். அதன் பலத்தினுல்தான் உண்மை வாழ்வு கிளைத்து மலர்ந்து கனிந்து வளரும். இல்லறத்தில் மரபை வளர்க்கும் ஒரே ஒரு நோக்கத்தை முன்னிட்டுச் சிற் றின்பம் நுகர அனுமதி உண்டு. மற்ற ஆசிரம தருமங்கள் அனைத்தும் பிரம்மசரியத்தையே அடிப்படையாகக் கொண்டவை.

குருகுலக் கல்வி

வீரவிளக்கு வ.வே.சு. ஐயரும் நானும் சேர்ந்து பாரத்வாஜ ஆசிரமமும் பிரம்மசரிய குருகுலமும் நடத்திஞேம். ஐயர் பிரம்மசரிய சாதனத்தில் மிகவும் கண்டிப்புடன் மாணவர் களின் நடைமுறை வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்து வந்தார்.

அங்கு மாணவர்கள் புளி மிளகாய் இல்லா மல் சோறும் கூட்டும் மோரும் கனி கடலையும் இரண்டு வேளை உண்டனர். ஏகாதசியன்று பட்டினி விரதம் காத்தனர். காலை நான்கு மணிக்கு எழுந்து காலைக்கடன்களை முடித்துத் தோட்ட வேலையும் ஆசனங்களும் பிராணு யாமமும் செய்தனர். பிறகு குளித்து வந்து, கீதைப் பாராயணம் செய்து தியானித்தனர். அதன் பிறகு காலையில் கேப்பைக் கூழும் கடலைச் சுண்டலும் உண்டு, வகுப்புகளுக்குச் சென்றனர். பதினெரு மணிக்கு வெயில் முழுக் காடிப் பிறகு தொட்டிநீரில் மல்லாந்து அடி வயிற்றைத் தேய்த்து உடம்பைச் சுத்தி செய்து கொண்டு, பிரார்த்தனை செய்தனர்.

பன்னிரண்டு மணிக்குச் சோறு கூட்டு மோருடன் மாணவர்களுக்கு உணவு வழங்கப் பட்டது. பிறகு அவரவர் அறைகளைச் சுத்தம் செய்து இரண்டு மணிக்குப் பள்ளிக்கூடம் சென்று ஐந்து மணி வரையில் கற்றனர். அதன் பிறகு ஆறரை மணி வரையில் குஸ்தி, சிலம்பம் முதலிய பயனுள்ள உடற்பயிற்சிகளில் ஈடு பட்டனர். அதன் பிறகு உடம்பு சுத்தம் செய்துகொண்டு காயத்திரி ஜபம், தியானம் ஆன பிறகு, இரவு உணவின்போது இரண்டு வாழைப்பழங்களையும் சேர்த்து உண்டனர். பின்பு பாடங்களைப் படித்தனர். இரவு ஒன்பது மணிக்கு வானசாஸ்திரத்துடன் தேச வரலாறு, பாரதம், இராமாயணம், பாரதசக்தி, ஸ்ரீராம கிருஷ்ணர், விவேகானந்தர் சரித்திரங்களி லிருந்து ஒரு கதை கேட்டு, பத்து நிமிஷம் தியானித்து உறங்கினர்.

வெயிற்காலத்தில் மாணவர்கள் வெட்ட வெளியில் பாய்விரித்து உறங்கினர். பனி மழை இருக்கும் சமயங்களில் குடிலுக்கு உள்ளே உறங்கினர். இத்தகைய ஒழுக்கங்களுடன் வாழ்ந்து வந்த மாணவர்களுக்குப் பிரம்ம சரியம் சித்தித்தது.

மாணவர் திருந்தினர்

ஆனல் இந்த ஒழுக்கத்திலும் சில தவறுகள் நடப்பது மனித இயல்புதான். ஐந்து கல்லூரி மாணவர்கள் பிரம்மசரிய ஒழுக்கம் தவறி, ஹோட்டல்களில் உண்பதும், நாடகம் பார்ப் பதும், நாவல் படிப்பதும், இருட்சேட்டைகள் செய்வதுமாக இருந்தனர். அவர்கள் மற்ற மாணவர்களையும் கெடுத்து வந்தார்கள். அவர் களை வ.வே.சு. ஐயரும் நானும் கண்டுபிடித் தோம். அவர்களைத் திருத்தும் நோக்கத்துடன் நாங்கள் இருவரும் இரண்டு நாள் பட்டினி

---

*''ப்ரஹ்மசர்யப்ரதிஷ்டாயாம் வீர்யலாப:''
—பதஞ்சலி யோகசூத்திரம்

இருந்தோம். இதைக் கண்டு, ஒழுக்கம் தவறிய மாணவர்களும் பட்டினி கிடந்து வருந்தி, மற்ற மாணவர்களின் முன்பு தங்கள் பிழைகளை ஒப்புக்கொண்டனர். அந்த மாணவர்கள் ஐயரிடம், ''விலங்குணர்வாலே காமத்தினவில் ஈடுபட்டோம். காமநூல்களே எங்களுக்குச் சுவைத்தன. அதனல் எங்கள் உடல் மெலிந்தது; மனம் தளர்ந்தது; பாடம் ஏறவில்லை. இன்று முதல் கெட்ட பழக்கங்களை விட்டுவிட்டோம்'' என்று சூரியசாட்சியாகச் சபதம் செய்து திருந்தினர்.

நான் மாணவர்களுக்குப் பீஷ்மர், துருவன், பிளேட்டோ, சுவாமி விவேகானந்தர், இமானுவேல் கான்ட், ஏசுநாதர், அப்பர், மாணிக்கவாசகர், பிரான்ஸிஸ் முனிவர், தெரஸா முனிவர் முதலியவர்களின் வரலாறுகளைச் சொல்வதுண்டு.

அறிவுரை

பிரம்மசரியத்தின் வலிமையால் தவம் வளர்த்த வசிஷ்டர் நாட்டிய யோகதண்டத்தின் முன்பு விசுவாமித்திரரின் சேனுபலமும் தோற்றது.

''திக் பலம் க்ஷத்ரியபலம் ப்ரஹ்மதேஜோ பலம் பலம்—க்ஷத்திரியரின் சேனைபலம் தவ முனிவரின் பிரம்மசரிய பலத்தின் முன்பு நிற்க முடியாது'' என்று விசுவாமித்திரர் பணித்தார்.

பகவான் ஏசுநாதர், ''ஊன் பிறப்பு ஊன் உணர்வுடையது; ஆன்மிகத்தில் மறுபிறப்பு அடைக; அதுவே ஊனம் கடந்த உள்ளுணர்வில், இன்ப உணர்வில் உன்னை உய்விக்கும் மறுபிறப்பாகும்''* என்கிருர்.

பிரம்மசரியம் பழகுவதனுலும், மனதையும் புலன்களையும் கட்டுப்படுத்துவதனுலும் ஆன்மிக பலம் அடையப்படுகிறது. இதை நம் பாரத நாட்டு மகான்கள் அனுபவத்தில் உணர்ந்து மனிதகுலத்துக்கு அறிவுறுத்தியிருக்கிருர்கள்.

பிரம்மசரியத்துக்கு ஓங்கார சாதனம் மிகவும் நல்ல முறையில் துணை செய்கிறது. கட உபநிஷதம், ''வேதங்கள் யாவும் எந்தப் பொருளைப் போற்றுகின்றனவோ, தவங்கள் யாவும் எதை நாடுகின்றனவோ, எதை விரும்பிப் பிரம்மசரியத்தை அனுஷ்டிக்கிருர்களோ, அந்தப் பதத்தை உனக்குச் சுருக்கிக் கூறுவேன். அது 'ஓம்' என்பதே ஆகும்'' என்று கூறுகிறது.*

உள்ளம் தூயதானல், புலன்கள் உள்ளடங்கி மனம் தெளிந்தால், இதயக்குகையில் பிரணவ நாதம் எழுந்து முழங்கும்.

ஆணிலே சிவனையும் பெண்ணிலே சக்தியையும் வணங்கி, சிவசக்தி உணர்விலே வாழ்வது மிகச் சிறந்த சாதனம் ஆகும். இதை அரவிந்தர் பயின்று காட்டினர். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரோ வாழ்ந்தே காட்டியிருக்கிருர்.

கிரேக்க நாட்டு சாக்ரடீஸ், ''அன்பனே! ஆசையை அடக்கு; புலன்களைப் புறப்பொருள்களை நாடி அலைய விடாதே; உள்ளபொருளிடம் (Self as it is) கருத்தை ஊன்று; அறிவு உள்ளிருந்து மலரும்'' என்று பிளேட்டோவுக்கு அரிய உபதேசம் செய்தார். அதன்படி, பிளேட்டோவும் ஆயுள் முழுவதும் பிரம்மசாரியாக இருந்து அறிவுக் கடலாக விளங்கினர். அதுபோலவே சீன ஞானியாகிய லவுத்சும், ''தனித்திரு, உள்ளே விழித்திரு'' என்று உபதேசித்திருக்கிருர்.

இறுதியில் பிரம்மசரிய ஒழுக்கத்திற்குத் துணைபுரியக் கூடிய சிலவற்றைச் சொல்லி முடிப்போம்:

1. உணவுத் தூய்மை வேண்டும். நன்ருகப் பசித்த பின்பு சோறு, பருப்பு, காய்கறிக் கூட்டு, மோர், கனிகள் உண்க. காபி, டீ, மீன், புலால், அதிக இனிப்பு, அதிக உரப்பு ஆகியவற்றைத் தவிர்ப்பது பெரிதும் நலன் தரும்.
2. மலச்சிக்கல் கூடாது. ஏகாதசி நாட்களில் பட்டினியிருத்தல் நல்லது. துளசி ஊறிய நீரை ஒரு மணிக்கு ஒரு தம்ளர் குடித்து வருக. மலசுத்தி இயற்கையாக உண்டாகும்.
3. நரம்புகள் வலிமை பெற வேண்டும். அதற்குச் சர்வாங்காசனம், மச்சாசனம், பச்சிம—உத்தான ஆசனம், ஜயாசனம்,

---

* You must be born again; for what is born of flesh is flesh; and what is born of the spirit is spirit.

*ஸர்வே வேதா யத்பத-மாமநந்தி தபாம்ஸி ஸர்வாணி
ச யத் வதந்தி | யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி
தத் தே பதம் ஸங்க்ரஹேண ப்ரவீம்-யோமித்யேதத் ||

பிராணமுத்ராசனம் போன்ற ஆசனங்களைத் தவருமல் பயின்று வருக.

4. பிராணுயாமம், காயத்திரி ஜபம், சூரிய நமஸ்காரம், இஷ்டதெய்வத்தின் நாம ஜபம் ஆகியவற்றைப் பழகி வருக.

5. கீதை, உபநிஷதங்கள், தேவாரம், திருவாசகம், ஆழ்வார்களின் அமுதமொழிகள் போன்ற அருள்நூல்களைப் படித்துச் சிந்தித்து நடக்க வேண்டும்.

6. கடவுள் பக்தியும் சத்சங்கமும் முற்றிலும் அவசியம். ஓய்வுநாளில் கோயில்களுக்கும் திருமடங்களுக்கும் சென்று தரிசிப்பது நலமாகும்.

7. 108 தரம் காயத்திரி அல்லது குருமுகமாகப் பெற்ற மந்திரத்தை ஜபித்து எந்தக் காரியத்தையும் தொடங்குவது நல்ல பயிற்சியாகும்.

8. கசகசக் கூட்டங்களிலும் வம்பளப்பவர்களிடமும் சேராமல் தனித்திருத்தல், ஆசை ஆணவமற்றிருத்தல், மன அமைதியுடன் உயர்ந்த சிந்தனைகளுடன் உள் நோக்கியிருத்தல் ஆகியவை சிறந்த மனப் பயிற்சியாகும்.

9. திருமணம் ஆனவரும் மரபு வளர்ச்சிக்கே வீரியத்தை வழங்கி, மற்ற நேரங்களில் சிவ-சக்தி உணர்வுடன் சாதன வாழ்க்கை வாழ்வது சிறந்ததாகும். அதனுல் குண்டலினிக் கனல் விழித்தெழும். விந்து மேல் நோக்கிச் சென்று ஓஜஸ் ஆக மாறிச் சக்தியளிக்கும்.

10. ஆற்றல், அறிவு, ஆயுள், உடல்நலம் ஆகியவற்றுக்கு ஊற்ருக விளங்கும் விந்துவே நமது உயிர். அதைக் காப்பதன் மூலம் நம்மை நாம் சுத்தசக்திமயமாக்க வேண்டும்.

செய்திகள்

நாட்டறம்பள்ளியில் மகாகும்பாபிஷேகப் பெருவிழா

வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நாட்டறம்பள்ளி ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் புதிய கட்டிடத்தில் 1978 ஏப்ரல் 12-ஆம் நாள் தெய்வப் பிரதிஷ்டையும் கும்பாபிஷேகமும் விமரிசையாக நடந்தேறின.

பொள்ளாச்சி N. மகாலிங்கம் அவர்கள் 3-4-78-ஆம் நாள் மாலை 7 மணிக்கு N. கிரிதாரி பிரசாத் அவர்களின் மகாபாரதத் தொடர்ச் சொற்பொழிவைத் துவக்கி வைத்தார். இந்தச் சொற்பொழிவுகள் 3-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை நடைபெற்றன. 11-4-78-ஆம் நாள், தென்பிராந்திய இந்திய ராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் S. P. மகாதேவன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சுவாமி சோமானந்தரும் சுவாமி அனன்யானந்தரும் உரையாற்றினர். 11-ஆம் நாள் இரவு எட்டு மணிக்கு 'ஆதி சங்கரர்' என்னும் தலைப்பிலும், 12-ஆம் நாள் இரவு 'பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்' என்னும் தலைப்பிலும் சுப்பு ஆறுமுகம் அவர்களின் வில்லுப்பாட்டுக் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

12-ஆம் நாள் புதிய ஆலயத்தில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் திருவுருவப் படங்களை ஸ்ரீராமகிருஷ்ண மடம், சங்கம் ஆகியவற்றின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்தஜி மகராஜ் அவர்கள் பிரதிஷ்டை செய்தார்கள். பகல் 12 மணி முதல் 3 மணி வரையிலும் சுமார் 7000 மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. அன்று மாலையில் நடைபெற்ற விழாவில் ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்தஜி மகராஜ் அவர்கள் தமது ஆசிகளை வழங்கினுர்; அன்றைய பொதுக்கூட்டத்தில் பீஜித் தீவுகளைச் சேர்ந்த இராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி ருத்திரானந்தர், T. S. அவிஞசிலிங்கம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

13-ஆம் தேதி மாலை 4 முதல் 5-30 மணி வரை திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் 'குருபக்தி' என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தினுர். அதைத் தொடர்ந்து சுவாமி தபஸ்யானந்தரின் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன் அவர்கள் சொற்பொழிவாற்றினுர்.

விழா நிகழ்ச்சிகளில் ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் பல்வேறு கிளைகளையும் சேர்ந்த துறவிகளும் பக்தர்களும் பங்கு கொண்டனர். விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட காவடி, கரக ஆட்டம், உடுக்கை, சிலம்பம், பஜனை போன்ற தமிழ்நாட்டுக் கலைகள் சிறப்பாக நடைபெற்றன. இறுதி நாளாகிய 14-ஆம் நாள் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவுருவப்படம் திருவீதி உலா வந்தது. அன்றைய இரவு, சுவாமி விவேகானந்தர் நாடக மன்றத்தினரால் 'பாதுகா பட்டாபிஷேகம்' என்னும் நாடகம் நடைபெற்றது.

எங்கும் முழுமதியம்

வாகீசகலாநிதி **கி. வா. ஜகந்நாதன்**

சிவபெருமானுடைய தோற்றத்தில் மற்ற மூர்த்திகளிடம் காணுத பல விசித்திரமான பொருள்களைக் காணலாம். அவனுடைய திருமேனி உறுப்புக்கள், அவன் அணிந்த ஆடை, மலர், அணிகலன்கள் எல்லாமே வேறு ஒருவரிடம் காணுத வகையில் இருக்கும். அவனுக்கு நெற்றியிலே கண் உண்டு. அந்தக் கண்ணும் குறுக்கே இருக்கும். அதனுல் விருபாக்ஷன் என்ற திருநாமம் அவனுக்கு அமைந்தது. அவன் தலையில் செக்கச்செவேலென்ற சடை. அதுவும் அவனுக்கே உரிய இலக்கணம். அவன் கண்டம் கரியது; ஆலகால விடத்தை உண்டதனுல் அமைந்த மாறுபாடு. இதுவும் அவனுக்கு உரிய அடையாளம்.



அவன் அரையில் உடுப்பது புலித் தோல்; மேலே போர்ப்பது யானைத் தோல். அவன் மாலையாக அணிவதோ எருக்கு, பூளை, தும்பை, கொன்றை. இவற்றை வேறு யாரும் அணிவதில்லை.

அவனுடைய அணிகலன்களோ பாம்பு, என்பு, தலைமாலை. அவன் பூசும் சாந்தம் நீறு. இவைகளும் சிவபெருமானுக்கே உரிய தனி அடையாளங்கள்.

மற்றத் தேவர்கள் பொன்னுடை புனையவும் சிறந்த மலர்மாலைகளை அணியவும் பல அணிகலன்களைப் பூட்டவும் கருணைபாலித்துத் தான் யாரும் பயன்படுத்தாதவற்றை ஏற்றுக்கொண்டிருக்கிருன். தன்னுடைய குழந்தைகளுக்கு எல்லா வகையான உணவுகளையும் பரிமாறிவிட்டுத் தான் எஞ்சியிருக்கும் தீய்ந்த அடிச்சோற்றை உண்ணும் தாயைப் போன்ற தியாகி அவன்.

அவன் இந்தக் கோலத்தோடு இருப்பதே அவனுடைய உயர்வையும் கருணையையும் எடுத்துக்காட்டுவதாகப் பெரியோர்கள் கருதுவார்கள். உலகமெல்லாம் அழிந்தாலும் அழியாதவன் அவன். தேவர்கள் யாவரும் இறந்துபட்டாலும் சாவா மூவாப் பேராளன் அவன். எல்லாம் அழிந்த பிரளய காலத்தில் தேவர்களின் எலும்பை அணிந்துகொள்கிருன் அவன். பிரமனுடைய கபாலத்தை ஏந்துகிருன். மற்றத் தேவர்களுடைய கபால மாலைகளைத் தலையிலே தரித்திருக்கிருன். இவை அவனுடைய அழியாத்தன்மையை விளக்கும் அடையாளங்கள்; அவன் நித்தியன் என்பதைக் காட்டும் அறிகுறிகள்.

இறைவனுடைய வடிவம், அவன் திருவிளையாடல்கள் முதலிய யாவுமே குறியீடுகள் (symbols). அவற்றினூடே உண்மைக் கருத்துக்கள் மறைந்துள்ளன. அவற்றைத் தெரிந்துகொண்டாலன்றி அந்தக் கோலத்தின் பெருமையை நாம் உணர இயலாது. அறிவு நிலை உயர உயரக் குறியீடுகள் அதிகமாகும். அவை நுட்பமானவை. கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் மேலே போகப் போகக் குறியீடுகளைக் காண்கிருேம். அவற்றைத் தெரிந்துகொள்ளாதவர்கள் அந்தத் துறைகளில் அறிவைப் பெற இயலாது.

மூன்ருவது வகுப்பில் பயிலும் பிள்ளைக்குக் கூட்டல் கழித்தல் கணக்குக் கற்றுக் கொடுக்கிருர்கள். கரும்பலகையில் 4—2=2 என்று எழுதியிருக்கிருர்கள். முதல் வகுப்பில் படிக்கிறவன் அதை எப்படிப் படிப்பான்? நாலு, ஒற்றைக் கோடு, இரண்டு, இரட்டைக் கோடு, இரண்டு என்றே படிப்பான். அப்படிப் படிக்கும் படிதான் அந்தக் கணக்கு இருக்கிறது. அவன் ஒற்றைக் கோடு, இரட்டைக் கோடு என்பவை குறியீடுகள் என்பதை உணராதவன். ஆகையால் அப்படிப் படிக்கிருன். அவற்றைத் தெரிந்துகொண்ட மூன்ருவது வகுப்புப்

பிள்ளேயோ நாலில் இரண்டு போனல் மிச்சம் இரண்டு என்று படிப்பான். அவனுக்கு ஒற்றைக் கோடு கழித்தலைக் குறிக்கும் குறி என்றும், இரட்டைக் கோடு மிச்சத்தைக் காட்டும் குறியீடு என்றும் தெரியும். அதனல் அதை எப்படிப் படிக்க வேண்டுமோ அப்படிப் படிக்கிறன். முதல் வகுப்புப் பையன் படித்ததும் சரிதான்; ஆனல் அவன் குறியீட்டைப் புரிந்துகொள்ளாமல் படிக்கிறன்; கணக்கை எழுதினவர்களின் நோக்கத்தை அவனல் புரிந்து கொள்ள முடியவில்லே. மூன்றும் வகுப்புப் பிள்ளேயோ ஒற்றைக் கோட்டை ஒற்றைக் கோடாகவும் இரட்டைக் கோட்டை இரட்டைக் கோடாகவும் பார்த்தாலும், அவற்றைக் குறியீடுகளாகக் கொண்ட கருத்தை, அந்தக் குறியீடுகள் காட்டும் குறிப்பை உணர்ந்து கொண்டு படிக்கிறன். அதனல் அவனுக்குக் கணக்குப் புரிகிறது.

இறைவனுடைய கோயில்கள், வடிவங்கள் ஆகியவை அடையாளங்கள். அந்த அடையாளங்கள் அழகாகவே இருக்கின்றன. என்றுலும் அவற்றல் உணர்த்தப்படும் தத்துவங்களேத் தெரிந்துகொண்டால்தான் அவற்றின் அருமை பெருமை புலனுகும். இல்லாவிட்டால் பல சமயங்களில் குழப்பம் ஏற்படும். இந்த நுட்பத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதை அப்பர் சுவாமிகள் வலியுறுத்துகிறர்.

''குறிக ளும்அடை யாளமும் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நீர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீர், உமக்கு என்கொல் புகாதவே.''

ஆகவே, இறைவனுடைய திருக்கோலத்தில் உள்ளவற்றின் உள்ளுறையைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

காரைக்கால் அம்மையார் இவற்றையெல்லாம் நன்கு உணர்ந்து இறைவனுடைய திருமேனியில் உள்ளவற்றைப் பார்த்துப் பார்த்து மகிழ்கிறர். அவர் உள்ளுறையாகிய தத்துவத்தை உணர்த்தவில்லே. அவர் அதை உணர்ந்திருப்பதால் அவற்றைக் கண்டு கண்டு பல வகையில் பாராட்டுகிறர். முரண்பாடு போலக் கேள்வி கேட்கிறர். உவமைகளே எடுத்தாளுகிறர். அவற்றின் உள்ளுறையை உணராமல் தோற்றத்தை மட்டும் கண்டால் அச்சம் அல்லவா தோன்றும்? இறைவன் தன் திருமுடியின் மேல் வெள்ளேயான கபாலமாலேயை அணிந்திருக்கிறன். அதைக் கண்டால், உண்மை தெரியாதவர்களுக்கு, பயந்தான் உண்டாகும்.

அம்மையார் அந்தத் தலேமாலேயைக் கண்டு கண்டு மகிழ்கிறர். அது பெருமானுடைய நித்தியத்துவத்தைக் காட்டுகிறது என்பதை அறிந்தவர் அவர். இப்போது அதை உற்றுக் கவனிக்கிறர்.

சிவபெருமானுடைய திருக்கோலங்களில் ஒன்று சங்கரநாராயண மூர்த்தம். இடப் பாதியில் திருமாலும் வலப் பாதியில் சிவபெருமானும் இணேந்துள்ள திருவுருவம் அது. இதை ஆழ்வாரும், ''பிறைதங்கு சடையானே வலத்தே வைத்து'' என்று பாடியிருக்கிறர். திருமாலும் சிவபெருமானும் வேறு வேறல்லர் என்பதைக் காட்டும் திருவுருவம் இது. சங்கரநயினர் கோவிலில் இந்த மூர்த்தியின் சந்நிதி இருக்கிறது. மாலிருக்கும் பாதியனுகை அங்கே இறைவன் எழுந்தருளியிருக்கிறன். கேசவார்த்த மூர்த்தி என்றும் இந்தப் பெருமானேச் சொல்வார்கள். இந்தக் கோலம் அம்மையாரின் நினேவுக்கு வருகிறது.

செங்கண் திருமாலேப் பங்குடையான்.

சிவபெருமான் திருமுடிச் சடை சிவப்பானது; செஞ்சடை. அதனல் அவனுக்குச் செஞ்சடையப்பன் என்ற திருநாமம் வந்தது. திருப்பனந்தாளில் எழுந்தருளியிருக்கும் சிவபிரான் அந்தத் திருநாமத்தை உடையவன். அருணஜடேசுவரன் என்று வடமொழியில் சொல்வார்கள்.

அவனுடைய செஞ்சடையில் கபால மாலே இருக்கிறது. அதை வெண்டலே மாலே, தலே மாலே, சிரமாலே என்றும் சொல்வார்கள். பல கபாலங்களேக் கோத்த மாலே அது. எத்தனேயோ பிரமர்கள் அழிய அழிய அவர்கள் கபாலங்களே மாலேயாக அணிந்திருக்கிறன். அந்த மாலே வெள்ளேயாக இருக்கிறது. சிவப்பான சடையில் வெளுப்பான அந்த மாலே பளிச்சென்று தெரிகிறது.

அந்தச் சிரமாலேயைக் கண்டு களிக்கிறர் அம்மையார். அது சிவபெருமானுடைய சிறப்பை எடுத்து விளக்குகிறது. அது காட்சியளிக்கும் சீரைச் சிந்திக்கிறர். அதன் உட்கருத்தைச் சிந்திக்கவில்லே. கவியுள்ளத்தோடு

அதைப் பார்க்கிறார். இந்த மாலைக்கு எதை உவமையாகச் சொல்லலாம் என்று எண்ணிப் பார்க்கிறார்.

இறைவனுடைய சடாபாரம் சிவப்பாக இருக்கிறது. சூரியன் மறைந்த பிறகு தோன்றும் செக்கர் வானம் போல அந்தச் சடைப் பரப்பு, காட்சி அளிக்கிறது.

செஞ்சடை மேல் வைத்த
சிரமாலை தோன்றுவதோர் சீர்.

எப்படி இருக்கிறது என்று உவமை கூற வந்த அம்மையாருக்கு அந்தச் செஞ்சடை 'செக்கர் அகல் வானம்' என்று சொல்லத்தக்க பாங்கில் இருப்பதாகக் தோன்றுகிறது. இறைவன் சடையில் பிறையை வைத்திருக்கிறான். இந்தத் தலை மாலையிலுள்ள தலைகளோ உருண்டை உருண்டையாக இருக்கின்றன. இவற்றுக்கு எதை உவமை சொல்லலாம் என்று யோசிக்கிறார். ஒவ்வொரு தலையும் ஒவ்வொரு பூரண சந்திரனை, முழு மதியமாகத் தோன்றுகிறது என்று சொல்லலாமா? மிகவும் பொருத்தம். செக்கர் வானத்தில் முழுமதியம் தோன்றுவது இயற்கை தான். ஆனால் அந்த வானத்தில் ஒரு சந்திரன் தான் தோன்றுவான். இங்கே ஒன்றல்ல, இரண்டல்ல, வரிசையாகப் பல முழுமதியங்கள் தோன்றுகின்றன. எங்கே பார்த்தாலும் முழுமதியங்கள்!

ஒரு பூரண சந்திரனைப் பார்த்தாலே எவ்வளவு அழகாக இருக்கிறது! காட்சிக்கு எவ்வளவு இனிமையாக இருக்கிறது! வானம் முழுவதும் பல சந்திரன்கள் தோன்றினால் கண் கொள்ளாக் காட்சி; ஒரே அழகுக் கொள்ளை!

அங்கண் முழுமதியம் செக்கர் அகல்
வானத்து
எங்கும் இனிது எழுந்தால் ஒவ்வாதே?

நாம் எல்லாம் எலும்பையும் எலும்புத் தலையையும் கண்டு பயப்படுவோம். மரணத்தை நினைப்போம். இறைவனிடம் ஈடுபட்ட அம்மையார், இறைவனுடைய அணிகலனாக அதைக் காண்கிறார். அதன் உள்ளுறையை உணர்ந்தவர் அவர். ஆகையால் அந்தக் காட்சியைக் கண்டு கண்டு கண் குளிர்கிறது. அவர் தலைமாலையையா பார்க்கிறார்? எங்கும் பூரண சந்திரன்கள் பல தோன்றுவதை அல்லவா பார்க்கிறார்? அவன் கண் ஏன் குளிராது?

அவர் உள்ளத்தில் உள்ள அன்பு நமக்கு இருந்தால், நாமும் அப்படிப் பார்க்கலாம். இறைவனுடைய நினைப்போடு இனிதாகக் காணலாம்.

இனி முழுப் பாட்டையும் பார்க்கலாம்.

அங்கண் முழுமதியம் செக்கர் அகல்வானத்து
எங்கும் இனிதுஎழுந்தால் ஒவ்வாதே?—
செங்கண்
திருமாலைப் பங்குடையான் செஞ்சடைமேல்
வைத்த
சிரமாலை தோன்றுவதோர் சீர்.

[செம்மையான கண்ணையுடைய திருமாலைத் தன் பங்கில் உடையவனாகிய சிவபிரானுடைய செம்மையான சடாபாரத்தின் மேல் அணிகலனாக வைத்த தலைமாலை தோற்றமளிக்கிற ஒப்பற்ற அழகு, அழகிய இடத்தையுடைய பூரண சந்திரன்கள் செம்மை நிறமுடைய அகன்ற வானத்தில் எங்கும் இனிதாக உதயமானாற் போல உள்ளதல்லவா?

அம்கண்-அழகிய இடம்; செக்கர்-செம்மை; செக்கர் வானம், அகல்வானம் என்று கூட்டுக. ஒவ்வாதே-ஒவ்வாதோ; ஏ:வினா. செந்தாமரை போன்ற கண்ணுடையவனாதலின் செங்கண் திருமால் என்றார்; ''செங்கணவன்பால் திசைமுகன்பால்'' என்பது திருவாசகம். தோன்றுவதாகிய ஓர் சீர்; ஓர் சீர்-ஒருவகையான அழகு என்றும் சொல்லலாம். சீர் ஒவ்வாதே என்று கூட்டி முடிக்க.]

அற்புதத் திருவந்தாதியில் 52-ஆம் பாடல் இது.

விவசாயியும் ஜோதிடரும்

வி. சோலைராஜன்

நல்ல செயல்கள் நல்ல பலனை விளைவிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. அதுமட்டுமின்றி, நல்ல சிந்தனைகளேகூட நல்ல பயனை விளைவிக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றன. இந்த விவசாயியின் கதையைப் படிக்கும்போது அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகிய பூசலார் நாயனாரின் நினைவு வருகிறது. அதோடு நம் முன்னோர்கள் மானசபூஜையை நமக்கு வகுத்துஅளித்திருப்பதற்கான காரணமும் புரிகிறது.

★ ★ ★ ★ ★

அது ஒரு சிற்றூர். அந்த ஊரிலே புகழ் பெற்ற ஜோதிடர் இருந்தார். ஒரு நாள் மாலை நேரத்தில் அவரிடம் தம் ஜாதகத்தைப் பார்க்க ஓர் ஏழை விவசாயி வந்தார். அவர் தமது ஜாதகத்தை ஜோதிடரிடம் கொடுத்தார்.

ஜாதகத்தைச் சோதித்துப் பார்த்ததும் ஜோதிடருக்குத் தயக்கம் ஏற்பட்டது. காரணம், அந்த விவசாயிக்கு அன்றைய இரவே எட்டு மணிக்கு மரணம் நேரக்கூடிய ஒரு கண்டம் இருந்தது. ஜோதிடர் விவசாயியிடம் நேரிடையாக எதுவும் சொல்ல விரும்பாமல், ''ஐயா, இன்றைய தினம் எனக்கு முக்கியமான ஒரு வேலை இருக்கிறது. ஏதோ வேலைகளுக்கு இடையில் அதை நான் மறந்தே போய்விட்டேன். தங்கள் ஜாதகம் என்னிடமே இருக்கட்டும். நாளைக் காலையில் தாங்கள் என்னை வந்து பாருங்கள்'' என்று சொல்லி மழுப்பி விட்டார். ஜோதிடர் சொன்னதை உண்மை என்றே நம்பிய விவசாயி, மறுநாள் காலையில் வந்து பார்ப்பதாகச் சொல்லிச் சென்றார்.

விவசாயி சென்றதும் ஜோதிடர் தம் மனைவியை அழைத்து, "இப்போது என்னைப் பார்ப்பதற்கு ஒருவர் வந்தாரே, அவருடைய ஆயுள் இன்று இரவோடு முடியப்போகிறது. அதை அவரிடம் தெரிவிக்காமல், 'நாளைக்கு வந்து பாருங்கள்' என்று சொல்லி அனுப்பிவிட்டேன். அவர் உயிருடன் இருந்தால்தானே நாளைக்கு என்னை வந்து பார்க்க முடியும்?'' என்று சொன்னார்.

ஜோதிடரின் வீட்டிலிருந்து புறப்பட்ட விவசாயி, பக்கத்திலிருந்த தமது கிராமத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தார். வழியிலேயே மாலை சாய்ந்து இருள் சூழ ஆரம்பித்தது. அது மழைக்காலமாக இருந்ததனால் மழைத் தூறல் வேறு போட ஆரம்பித்துவிட்டது. விரைவில் இடியுடன் கூடிய பெருமழை கொட்ட ஆரம்பித்தது.

அப்போது விவசாயி ஒரு காட்டுவழியாகச் சென்றுகொண்டிருந்தார். மழைக்கு ஒதுங்குவதற்குச் சுற்றும் முற்றும் பார்த்த அவர் கண்களுக்குச் சற்றுத் தொலைவில் பாழடைந்த சிவன் கோயில் ஒன்று தட்டுப்பட்டது. விவசாயி ஓடோடிச் சென்று சிவன் கோயிலின் முன்னால் இருந்த மண்டபத்தில் ஒதுங்கிக் கொண்டார். மண்டபத்தில் நின்றுகொண்டிருந்த அவர், கோயிலின் பாழடைந்த நிலையைக் கண்டு பெரிதும் மனம் வருந்தினார்: 'ஹா! கோயிலின் கர்ப்பக்கிருகமும் மண்ட



பமும் இந்த அளவுக்குக் கேட்பாரற்றுப் பாழ்பட்டுப் போயிருக்கின்றனவே! ஆங்காங்கே ஆலமரமும் அரசமரமும் அல்லவா முளைக்க ஆரம்பித்திருக்கின்றன! என்னிடம் போதுமான பணம் இருந்தால் இந்தக் கோயிலைப் புதுப்பிக்கும் வேலையைத்தான் முதலில் செய்வேன்' என்று நினைத்துக்கொண்டார்.

அதோடு அவர் சிந்தனை மேலும் விரிந்தது. அந்தச் சிவன் கோவிலைப் புதுப்பிப்பதாக மானசிகமாக நினைத்துக்கொண்டார். கோபுரம், ராஜகோபுரம், உட்பிராகாரங்கள், மண்டபங்கள் ஆகியவற்றை அமைத்தார். கும்பாபிஷேகத்துக்கு வேதியர் புடைசூழத் திருக்குடம் பவனி வருவதாகக் கற்பனை செய்தார். பாழடைந்த கோவிலில் நின்றபடியே மானசிகமாகக் கும்பாபிஷேகத்தை விமரிசையாக நடத்திக் கர்ப்பக்

கிருகத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வணங்கினர்.

இத்தகைய சிந்தனைகளில் தம்மை மறந்து ஈடுபட்டிருந்த விவசாயி, தாம் நின்றுகொண்டிருந்த மண்டபத்தைத் தற்செயலாக ஏறிட்டு நோக்கினர். அங்கே சரியாக அவரது தலைக்கு மேலே பாழடைந்த மண்டபத்தின் ஒரு பகுதியிலிருந்து மழையின் குமுறலைக் கேட்டு வெளிவந்த ஒரு கருநாகம் படமெடுத்த நிலையில் அவரைக்கொத்தத் தயாராக இருந்தது! அதைக் கண்டாரோ இல்லையோ, 'ஐயையோ!' என்று விவசாயி அலறிப்புடைத்துக்கொண்டு மண்டபத்தை விட்டு வெளியே ஓடி வந்துவிட்டார். அதே சமயத்தில் மழையால் மிகவும் தளர்ந்திருந்த பாழடைந்த மண்டபம் திடுதிடுவென்று இடிந்து தரைமட்டமாயிற்று. அப்போது இரவு மணி எட்டு. மழையும் ஓய்ந்தது.

விவசாயி தம் வீடு திரும்பினர். மறுநாள் சென்று ஜோதிடரைச் சந்தித்தார். ஜோதிடர் திகைத்தார். அவர், 'நாம் ஜோதிடக் கணக்கில் தவறிவிட்டோமோ?' என்று கருதி, ஜோதிட நூல்களை எடுத்துத் துல்லியமாக ஆராய்ந்தார். கணக்குச் சரியாகவே இருந்தது. 'இப்படிப்பட்ட கண்டத்திலிருந்து ஒருவன் தப்ப வேண்டுமானல் அவனுக்கு ஒரு சிவன் கோவிலைக் கட்டி முடித்துக் கும்பாபிஷேகம் செய்த புண்ணியம் இருக்க வேண்டும்' என்று ஜோதிட நூலில் குறிப்பிடப்பட்டிருந்தது. 'பாவம்! ஏழை விவசாயியால் கோவிலைக் கட்டிக் கும்பாபிஷேகமா நடத்த முடியும்?' என்று நினைத்தபடியே, ஜோதிடம் அறிவித்த எல்லா விவரங்களையும் விவசாயியிடம் தெரிவித்தார். விவசாயி முதல் நாளிரவு தமக்கு நேர்ந்த அனுபவங்களை ஜோதிடரிடம் விளக்கமாக எடுத்துச் சொன்னர். பிறகு ஜோதிடர் விவசாயிக்கு மேற்கொண்டு சொல்ல வேண்டிய ஜோதிடத்தைக் கூறி அனுப்பினர்.

தெய்வப்பணி பற்றிய கற்பனைகூட, எவ்வாறு இடையூறுகளை நீக்குகிறது என்பதை இந்தக் கதை அறிவிக்கிறது.



மதமும் ஒழுக்கமும்

சுவாமி விவேகானந்தர்

1

பாமரனைப் பண்புள்ளவனுகவும் பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம் எனப்படும்.

2

மனிதன் முடிவில்லாத பிரம்மாண்டமான ஒரு வட்டம் போன்றவன். அந்த வட்டத்தின் சுற்றளவுப் பகுதியாக விளங்கும் பரிதி எங்குமில்லை. ஆனல் அந்த வட்டத்தின் மையம் குறிப்பிட்ட ஒரு புள்ளியில் அமைந்திருக்கிறது.

கடவுள் பிரம்மாண்டமான ஒரு பெரிய வட்டம் போன்றவர். அந்த வட்டத்தின் சுற்றளவுப் பகுதியான பரிதியும் எங்கும் கிடையாது. ஆனல் அந்த வட்டத்தின் மையம், எங்கும் எல்லா இடங்களிலும் அமைந்திருக்கிறது. கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள இலக்கணம் இதுதான்.

3

சுயநலம், சுயநலமின்மை என்பவற்றைத் தவிரக் கடவுளுக்கும் சாத்தானுக்கும் எந்தவித வேறுபாடும் இல்லை. கடவுளுக்குத் தெரிந்த அளவுக்குச் சாத்தானுக்கும் எல்லாம் தெரியும். கடவுளுக்குச் சமமான ஆற்றல்கள் சாத்தானுக்கும் உண்டு. ஆனல் தெய்விகத்தன்மை மட்டும்

தான் அதனிடம் இல்லை. எனவே அது சாத்தானாகவே இருக்கிறது.

இந்தக் கருத்தை நவீன உலகத்தோடு ஒப்பிட்டுப் பார். தெய்விகத்தன்மை இல்லாமல் பெறுகிற மிதமிஞ்சிய அறிவும் ஆற்றலும் மனிதர்களைச் சாத்தான்களாக்கிவிடுகின்றன.

4

நம்மை முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்வதே நல்லொழுக்கம். கீழ்நிலைக்கு இழுத்துச் செல்வதே தீய ஒழுக்கம். மிருக இயல்பு, மனித இயல்பு, தெய்விக இயல்பு என்ற இந்த மூன்று குணங்களால் மனிதன் உருவாக்கப்பட்டிருக்கிறான். உன்னிடமுள்ள தெய்விகத் தன்மையை வளர்க்கக் கூடியதுதான் நல்லொழுக்கமாகும். உன்னிடமுள்ள மிருக இயல்பை அதிகரிக்கச் செய்வதே தீய ஒழுக்கம். மிருக இயல்பை உன்னிடமிருந்து அழித்துவிட்டு மனிதத்தன்மை கொண்டவனாக நீ மாற வேண்டும். அதாவது அன்புள்ளமும் தர்ம சிந்தனையும் உடையவனாக இருக்க வேண்டும்.

பிறகு நீ அந்த நிலையையுங்கூடக் கடந்து சென்று தூய ஸத்-சித்-ஆனந்தமாக ஆக வேண்டும். சுடும் தன்மை இல்லாத நெருப்பாகவும், அற்புதமான அன்புள்ளவனாகவும், ஆனால் அதே சமயத்தில், பாமர மனிதனின் உணர்ச்சிவசப்பட்ட அன்பு என்ற பலவீனத்திற்கும் துன்ப உணர்ச்சிக்கும் உட்படாதவனாகவும் நீ ஆகவேண்டும்.

5

சுயநலமற்ற தன்மையே கடவுள் ஆகும். ஒருவன் சிம்மாசனத்தில் வீற்றிருந்து தங்கத்தாலான அரண்மனையில் வாழ்ந்தபோதும் அறவே சுயநலம் இல்லாதவனாக இருக்கலாம். அப்போது அவன் கடவுளிடமே இருக்கிறான். மற்றொருவன் குடிசையில் வாழ்ந்து கந்தைத் துணியை உடுத்துபவனாக இருக்கலாம். அவனுக்கு உலகில் செல்வம் எதுவுமே இல்லாமலிருக்கலாம். அப்படியிருந்தும் அவன் சுயநலம் உடையவனாக இருந்தால் அவன் இலௌகிகத்தில் ஒரேயடியாக மூழ்கியவனே ஆவான்.

6

நீ உற்சாகத்துடன் இருக்கத் தொடங்குவதுதான், நீ சமய வாழ்க்கை வாழ ஆரம்பிப்பதற்கான முதல் அறிகுறியாகும். ஒருவன் வாடிய முகத்தோடு இருப்பது குன்ம வியாதியின் விளைவாக இருக்கலாமேயன்றி, அது மத வாழ்க்கை ஆகாது. துன்பம் பாவத்தினால் ஏற்படுகிறது. அதைத் தவிர, பாவம் விளைவதற்கு வேறு எந்தக் காரணமும் இல்லை. இருளடைந்த முகங்களோடு உனக்கு என்ன தொடர்பு வேண்டியிருக்கிறது? அப்படி இருப்பது பயங்கரமானது. உன் முகத்தில் இருள் சூழ்ந்திருந்தால், அன்றையத் தினம் நீ வெளியே போகாமல் உன் அறையின் கதவை மூடிக்கொண்டு உள்ளேயே இரு. வெளியுலகத்திற்கு இந்த நோயைச் சுமந்துகொண்டு போவதற்கு உனக்கு என்ன உரிமை இருக்கிறது?

7

தீர்க்கதரிசிகளின் ஆற்றல் எங்கே இருந்தது என்பதை உலக வரலாற்றிலிருந்து நீ அறிந்ததில்லையா? அது எங்கே இருந்தது? அவர்களின் அறிவாற்றலிலா இருந்தது? அவர்களில் எவராவது தத்துவத்தைப் பற்றியோ, மிகவும் நுட்பமான தர்க்க நியாயங்களைப் பற்றியோ அருமையான ஒரு நூலாவது எழுதியிருக்கிறார்களா? அவர்களில் ஒருவருமே அப்படி எதுவும் எழுதியதில்லை. ஒரு சில வார்த்தைகளை மட்டுமே அவர்கள் பேசினார்கள்.

நீ இயேசு கிறிஸ்துவைப் போன்ற மனநிலையைக் கொள். கிறிஸ்துபெருமானாகவே நீ ஆகிவிடுவாய். புத்தரைப் போன்ற மனநிலையைக் கொள். புத்தர்பெருமானாகவே நீ ஆகிவிடுவாய். உயர்ந்த மனநிலைதான் வாழ்க்கையாக அமைகிறது, வலிமையைத் தருகிறது, உயிர் நாடியாக விளங்குகிறது. அத்தகைய மனநிலை இல்லாமற்போனால், அறிவாற்றல் எவ்வளவுதான் வேலை செய்தாலும் கடவுளை அடைய முடியாது.

8

ஒரே வார்த்தையில் வேதாந்தத்தின் இலட்சியம்: 'மனிதனின் உண்மையான இயல்பை அறிந்துகொள்வது' என்பதுதான். மேலும், 'கண்ணுக்குப் புலப்படும் கடவுளாக விளங்கும் உன் சகோதரனையே நீ வழிபட முடியாவிட்டால், கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்திருக்கும் கடவுளை எப்படி நீ வழிபட முடியும்?' —இதுவே வேதாந்தம் அறிவுரையாக வழங்கும் செய்தியாகும்.



விதுர நீதி

'நம்பி'

> திருதராஷ்டிர மன்னனுக்கு விதுரர் அளித்த அறிவுரைகள் சிறந்த பொக்கிஷங்களாக விளங்குகின்றன. வாழ்க்கைக்கு ஊன்றுகோல் போல் விளங்கும் விதுரநீதி இந்த இதழில் துவங்குகிறது.

பாண்டவர்களிடம் தூதுபோன சஞ்சயன் திரும்பி வந்து திருதராஷ்டிர மன்னனிடம் பாண்டவர்கள் சொன்ன விவரத்தைத் தெரிவித்தான்.

விவரம் தெரிய வந்ததும், விதுரரைக் கண்டு பேச விரும்பிய திருதராஷ்டிர மன்னன், வாயில்காப்போனிடம், "நீ சென்று விதுரனை என்னிடம் அழைத்து வா. தாமதிக்க வேண்டாம்'' என்று கட்டளையிட்டான்.

அதன்படி சென்று, வாயில்காப்போன் விதுரரை அழைத்து வந்தான். ''அரசே, தங்கள் கட்டளைப்படி விதுரரை அழைத்து வந்துவிட்டேன். உமது பாதங்களைத் தரிசிக்க வாயிலில் அவர் காத்து நிற்கிறார்'' என்று தெரிவித்தான்.

''பேரறிஞனை அவனை உள்ளே வரவிடு'' என்று கட்டளையிட்டான் மன்னன்.

உடனே வாயில்காப்போன் திரும்பி, விதுரரிடம் சொன்னதும், விதுரர் திருதராஷ்டிரனைச் சந்திக்க அந்தப்புரத்துக்குள் போனார்.

கவலையுடன் இருக்கும் திருதராஷ்டிர மன்னனைச் சந்தித்துக் கைகூப்பி வணங்கியவாறு, ''அரசே, உம்முடைய கட்டளைப்படி விதுரன் இதோ வந்திருக்கிறேன்'' என்று தெரிவித்துக் கொண்டார்.

அப்போது திருதராஷ்டிர மன்னன், ''விதுரா! சஞ்சயன் யுதிஷ்டிரனிடமிருந்து திரும்பிவிட்டான். யுதிஷ்டிரன் தெரிவித்ததை நாளைக்குச் சபையில் சஞ்சயன் சொல்லுவான். யுதிஷ்டிரன் என்ன சொல்லியனுப்பினான் என்பது தெரியவில்லை. எனக்குச் சரியானபடி தூக்கம் வரவில்லை. உடம்பெல்லாம் எரிகிறது. உள்ளமும் உடலும் நொந்து வருந்துகிற எனக்கு எது நன்மை என்பதை யோசித்துச் சொல். நாளைக்குச் சஞ்சயன் வந்து என்ன சொல்லுவானோ என்ற கவலை வேறு எனது உள்ளத்தை உறுத்துகிறது. எது நமக்கு நன்மையைத் தருமோ, மக்களுக்குச் சுகத்தை நல்குமோ அதைக் கூறு'' என்று சொன்னான்.

அதற்கு விதுரர், ''அரசே, வலிமையும் போர்ச் சாதனங்களும் இல்லாத நிலையில் பகைவனின் தாக்குதலுக்கு உள்ளானவன், பொருளைப் பறிகொடுத்தவன், காமி, திருடன் ஆகியோரால் தூங்க முடிவதில்லை. இத்தகைய பெரிய குற்றங்களுக்கு ஆளாகி, பிறருடைய பரிகாசத்துக்கு நீர் இலக்காகாமல் இருக்கிறீரா? பிறருடைய செல்வத்தைக் கண்டு பொறாமைப் படாமல் இருக்கிறீரா?'' என்று கேட்டார்.

''விதுரா, அறத்திலிருந்து நழுவாத சிறந்த உண்மைகளை உன்னிடமிருந்து கேட்க விரும்புகிறேன். அறிஞனான நீ உன் கருத்தைத் தெரிவி'' என்று சொன்னான் திருதராஷ்டிர மன்னன்.

அதற்கு விதுரர், ''அரசே, துரியோதனன், சகுனி, கர்ணன், துச்சாதனன் ஆகியவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு எப்படி நீர் அமைதியை எதிர்பார்க்கிறீர்?'' என்று கேட்டுவிட்டு அறவுரைகளைச் சொல்ல ஆரம்பித்தான்.

எவன் பண்டிதன்?

''ஆத்மஞானம், சரியான முயற்சி, பொறுமை, அறத்தில் பிடிப்பு ஆகிய இவை, எவனைக் கடமைகளிலிருந்து நழுவச் செய்யவில்லையோ அவனையே பண்டிதன் என்று உலகம் கொண்டாடுகிறது.

''அரசே, ஒரே மரத்திலிருந்து யாகத்துக்குத் தேவையான பல பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. அதேபோல, ஒரே பொருளி

விருந்தே நல்லதும் கெட்டதும் உண்டாகின்றன. பண்டிதன் புகழுக்கு உரிய காரியங்களைச் செய்வான். இகழுக்கு உரிய காரியங்களைச் செய்யமாட்டான். நாத்திகவாதம் பேசமாட்டான்; முயற்சியோடு இருப்பான்.

''கோபம், மகிழ்ச்சி, கொழுப்பு, நாணம், அடங்காமை, 'நானே போற்றுதற்கு உரியவன்' என்ற எண்ணம் ஆகியவை எவனைக் கடமைகளிலிருந்து நழுவச் செய்வதில்லையோ அவனே பண்டிதன் ஆவான்.

''செய்து முடித்த பிறகே எவனது காரியத்தையோ ரகசியத்தையோ பிறர் அறிய முடிகிறதோ அவனையே பண்டிதன் என்று உலகம் கொண்டாடுகிறது.

''குளிர், வெப்பம், அச்சம், விளையாட்டு, செல்வம், வறுமை ஆகிய இவை எவனது காரியத்தைத் தடைப்படுத்த முடியாதோ, அவனே பண்டிதன் ஆவான்.

''அறத்தையும் பொருளையும் அனுசரித்து எவனுடைய சிந்தனை செல்லுகிறதோ, எவன் இம்மையின் பொருட்டும் மறுமையின் பொருட்டும் பொருளைத் தேடுகிறானோ, அவனே பண்டிதன் ஆவான்.

''அறிவுத் தேர்ச்சியுள்ளவர்கள் தத்தம் ஆற்றலுக்குத் தக்கபடி காரியங்களைச் செய்ய விரும்புவார்கள்; செய்யவும் செய்வார்கள். எதையும் அவர்கள் அவமதிப்பதில்லை.

''பண்டிதன் சீக்கிரம் அறிகிறான்; நீடித்த காலம் கேட்கிறான்; தெரிந்துகொண்டு காரியத்தில் இறங்குகிறான்; ஆசைவயப்பட்டு இறங்குவதில்லை. பிறர் கேளாமல் தானே முந்திக் கொண்டு யோசனை சொல்வதில்லை. இது பண்டிதனுக்கு உரிய முதன்மையான லட்சணம்.

''அறிவில் தேர்ச்சி பெற்றவர்கள் அடைய முடியாததை அடைய ஆசைப்படுவதில்லை. கெட்டுப் போனதை நினைந்து கவலைப்படுவதில்லை. ஆபத்துக் காலங்களில் மயக்கமடைவதில்லை.

''உறுதியுடன் காரியத்தைத் தொடங்கி நடுவில் அதை விட்டுவிடாதவன், காலத்தை வீணாக்காதவன், மனதை வசப்படுத்தியவன் ஆகியவர்களையே பண்டிதர் என்று கூறுகின்றனர்.

''பண்டிதர்கள் மேன்மையான காரியங்களை விரும்புவார்கள்; நன்மையான காரியத்தை வெறுப்பதில்லை.

''எவன் புகழ்ச்சியால் மகிழ்ச்சி அடைவதில்லையோ, இகழ்ச்சியால் வருந்துவதில்லையோ, கங்கையின் மடுவைப் போல் கலக்கம் இல்லாமல் இருக்கிறானோ, அவனே பண்டிதன்.

''எவன் எல்லாப் பிராணிகளின் தன்மையை அறிந்தவனோ, எவன் எல்லாக் கர்மங்களின் முறையை அறிந்தவனோ, எவன் உபாயத்தை அறிந்தவனோ, மனிதர்களுள் அவனே பண்டிதன்.

''தடையற்ற வாக்குவன்மை, விசித்திரமாகப் பேசும் திறன், ஊகம் உடைமை, காலத்துக்குத் தகுந்த புத்தியுடையவன், சீக்கிரமாகச் சுவடிகளைச் சொல்லக்கூடியவன் ஆகிய பண்புகளைக் கொண்டவனையே பண்டிதன் என்பர்.

''சாஸ்திரப் பயிற்சிக்கு ஏற்ற கொள்கையுடையவனும், கொள்கைக்கு ஏற்ற சாஸ்திரப் பயிற்சியுடையவனும், சான்றோர்களின் முறையை மீறாதவனுமே பண்டிதன் என்ற புகழுக்கு உரியவர்.

''செல்வம், கல்வி, அதிகாரம் ஆகியவற்றை அதிகமாகப் பெற்றிருந்தும், எவன் அகந்தை இல்லாமலிருக்கிறானோ, அவனையே பண்டிதன் என்கிறார்கள்.''

(தொடரும்)



ஓர் அழைப்பு

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகைக்குத் தற்சமயம் 240 ஊர்களில் பத்திரிகை விற்பனையாளர்கள் ஏஜண்டுகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இப் பத்திரிகையின் மேல் ஈடுபாடு கொண்டுள்ள அன்பர்கள் அல்லது பத்திரிகை விற்பனையாளர்கள் ஏஜண்டுகள் நியமிக்கப்படாத ஊர்களுக்கு ஏஜன்சி எடுத்துப் பிரதிகளை விநியோகிக்க விரும்பினால், அதற்குரிய விதிமுறைகளை எங்களுக்கு எழுதிப் பெறலாம்.

— ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்

எழுத்தாளர்களுக்கு

நமது பத்திரிகைக்கு ஏற்புடைய கதை, கட்டுரை, தகவல்கள் முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

மக்களுக்குப் பயன்படுவதாகவும், சுருக்கமாகவும், கருத்தாழம் கொண்டதாகவும், எழுத்தோவியம் அமைவது முற்றிலும் அவசியம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும், வரிக்கு வரி நிறைய இடம் விட்டு எளிய தமிழ் நடையில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

பத்திரிகையில் வெளியிடப்படுவதாக இருந்தால், அனுப்பியவருக்கு ஒரு வார காலத்திற்குள்ளாக ஆசிரியர் சார்பாகப் பதில் கிடைத்துவிடும். அவ்விதம் பதில் பெறாத அன்பர்கள், போதிய தபால் தலைகளை அனுப்பிவைத்துத் தமது படைப்புக்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

ஆசிரியர்
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-600004

1978 ஜூன் மாத நிகழ்ச்சிகள்

சத் சங்கம்: ஞாயிறுதோறும் மாலை 4 மணி முதல் 8 மணி வரை

மாலை 4 முதல் 4-20 வரை ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் (4-6-78 & 18-6-78)

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் (11-6-78 & 25-6-78)

மாலை 4-20 முதல் 4-30 வரை தியானம்

மாலை 4-30 முதல் 5-30 வரை சொற்பொழிவு (தமிழ்)

1. **ஸ்ரீமத் பாகவதம்**—திரு 'அண்ணா' சுப்ரமண்யம் (4-6-78)
2. **ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்**—திரு வி.ஆர். கல்யாண சுந்தர சாஸ்திரிகள் (11-6-78)
3. **ஸ்ரீமத் இராமாயணம்**—டாக்டர் என். வீழிநாதன் (18-6-78)
4. **ஸ்ரீ பூதத்தாழ்வார்**—டாக்டர் ஆர். பாலசுப்பிரமணியம் (25-6-78)

மாலை 5-35 முதல் 6-30 வரை சொற்பொழிவு (ஆங்கிலம்)

1. **ஸ்ரீமத் பகவத்கீதை**—சுவாமி கபீரானந்தர் (4-6-78 & 25-6-78)
2. **பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்**—சுவாமி தபஸ்யானந்தர் (11-6-78 & 18-6-78)

வார நாட்களில் நடைபெறும் உரை நிகழ்ச்சிகள்—(மாலை 5-45 மணிக்கு)

திங்கள்: **பக்தி யோகம்**—சுவாமி அமிர்தானந்தர் (ஆங்கிலம்)

செவ்வாய்: **ஸ்ரீமத் அத்தியாத்ம ராமாயணம்**—சுவாமி கபீரானந்தர் (ஆங்கிலம்)

புதன்: **மகாபாரதம்**—திரு 'அண்ணா' சுப்ரமண்யம் (தமிழ்)

வியாழன்: **ஸ்ரீமத் பகவத்கீதை**—சுவாமி தன்மயானந்தர் (தமிழ்)

வெள்ளி: **ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள்**—பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா (தமிழ்)

வெள்ளி: **ஸ்ரீமத் பகவத்கீதை** (மாலை 6-30 மணிக்கு)

இடம்: ஸ்ரீராமகிருஷ்ண மந்திரம், 18, தெற்கு மாட வீதி, திருவல்லிக்கேணி.

சிறப்புச் சொற்பொழிவுகள்:

சனிக்கிழமைகளில் 1. **ஈசாவாஸ்ய உபநிஷதம்**—சுவாமி கீர்த்திதானந்தர் (3-6-78 & 17-6-78)

மாலை 5-45 மணிக்கு 2. **நாராயணீயம்**—திரு ஆர். கோதண்டராமன் (10-6-78)

3. **ஸ்ரீமத் பாகவதம்**—திரு பி. இராமகிருஷ்ணன் (24-6-78)

மாலை 6-30 மணிக்கு 4. **ஸ்ரீராமகிருஷ்ண கதாம்ருதம்**—சுவாமி அமலாத்மானந்தர் (10-6-78)

(இடம்: பெங்காலி அசோஷியேஷன், 25, கிரி ரோடு, சென்னை-17)

விசேஷ தினங்கள்:

25-6-78 ஞாயிறு: அந்தர் யோகம் (சாதனை தினம்)

4-6-78 ஞாயிறு: பலஹாரிணி காளி பூஜை (மாலை ஆரதிக்குப் பிறகு)

1-6-78 & 17-6-78 ஆகிய ஏகாதசி தினங்களில் மாலை வழிபாட்டிற்குப் பிறகு ஸ்ரீராம நாம சங்கீர்த்தனம் நடைபெறும்.

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தலைவர்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-600 004

தொலைபேசி: 71231

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் பற்றி....

பத்திரிகைகளின் மதிப்புரை

சுவாமி விவேகானந்தர் நிறுவிய ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் தமிழக மக்களுக்குப் பலவிதங்களிலும் தொண்டாற்றி வருகிறது. அதன் ஓர் அம்சமாகத் திகழ்வது ''ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்.''

சாஸ்திரங்களின் உட்பொருள் விளக்கங்கள், ஆத்ம தத்துவம் குறித்த ஆராய்ச்சி, வேதாந்தம், சித்தாந்தம், சமய சமரசம், சுவையான தத்துவக் கதைகள், உபநிஷத உண்மைகள், சைவ வைணவக் கருத்துக்கள் ஆகிய இத்தனையும் விஜயத்தில் இடம் பெற்று 'இராமகிருஷ்ண மணம்' கமழ்கிறது. தற்கால மக்களுக்கு ஏற்ற எளிய நடையில் கட்டுரைகள் எழுதப் பெறுகின்றன.

—கல்கி
24-4-1977

தற்கால நவீன மனப்போக்குக்கு ஏற்ற வகையில், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரும் சுவாமி விவேகானந்தரும் காட்டிய வழியில் சிறந்த மனிதர்களை உருவாக்கும் இலட்சியத்துடன் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் தொண்டாற்றி வருகிறது. இந்து மதத்தைப் பற்றிக் குறிப்பாகவும், பொதுவாக ஏனைய பிற மதங்களையும் தழுவிய கருத்துக்களைத் தாங்கி, இன்றைய இளைஞர்களும் நாடிப் படிக்கும் வகையில் மதங்களைப் பற்றிய உண்மைகளை எடுத்து அளிக்கின்றது. மகான்களின் உன்னத வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகளும், நடைமுறை வாழ்க்கையில் மதத்தைப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளும் இடம் பெற்று மிக்க பயனுள்ள மலராக வெளிவருகிறது.

ஆண்டுதோறும் வெளிவரும் சிறப்பு மலர், சந்தாதாரர்களுக்குக் கூடுதல் விலையில்லாமல் கிடைக்கிறது. தவிர, மடத்தின் வெளியீடுகள் சந்தாதாரர்களுக்கு, 5 சதவீதம் கழிவு நீக்கிக் கிடைக்கும்.

—தினமணி
22-5-77

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தென்னாட்டுக் கிளையானது, தான் ஆற்றிவரும் வேதாந்தப் பணிக்குத் தமிழைச் சிறந்த முறையில் பயன்படுத்தி வருகிறது. வேதாந்தத் தத்துவத்தைத் தமிழிலேயும் திறம்பட விளக்க முடியும் என்பதனை நீண்ட காலமாகவே ஸ்ரீராமகிருஷ்ண மடம் நிரூபித்து வருகிறது.

இந்தப் பணிக்கென ''ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்'' என்னும் பெயரில் சிறந்த மாத இதழ் ஒன்றையும் சென்னை மயிலாப்பூரில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடம் வெளியிட்டு வருகிறது.

இந்தப் பத்திரிகையின் இதழ்களை மாதந்தோறும் ஒருவர் தொடர்ந்து படித்து வந்தாலே, அஞ்ஞானத்திலிருந்து விடுபட்டு மெய்ஞ்ஞானியாக முடியும்.

பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம் பற்றிய விளக்கங்களெல்லாம் இனிய தமிழில் எளிய நடையில் ''ஸ்ரீராமகிருஷ்ண விஜய''த்தில் வெளிவருகின்றன.

ஸ்ரீராமகிருஷ்ணரின் அருள் வாக்குகள் இதழ்தோறும் வெளியிடப்படுகின்றன. வேதாந்தப் பத்திரிகையானாலும் திருமுருக கிருபானந்தவாரியார், வித்வான் கி. வா. ஜகந்நாதன் போன்ற சித்தாந்திகள் பலரின் கட்டுரைகளும் வெளிவருகின்றன.

கல்கத்தாவிலுள்ள தலைமை மடத்து வேதாந்திகளின் வாழ்க்கைக் குறிப்புக்களும், போதனைகளும், சாதனைகளும் அடிக்கடி ''ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்'' பத்திரிகையில் வெளிவருகின்றன.

தமிழ்நாட்டில் தோன்றி மறைந்த தாயுமானவர், வள்ளலார், சி. சுப்பிரமணிய பாரதியார் ஆகிய மெய்ஞ்ஞானியருடைய அருட்பாடல்களையும் அடிக்கடி படிக்க முடிகின்றது. இந்தச் சமரச ஞானியர்களின் கருத்துக்களையும், வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீ விவேகானந்தர் போன்ற அருளாளர்களின் வாழ்க்கைக் கருத்துக்களோடும் நிகழ்ச்சிகளோடும் ஒப்பிட்டுக் காட்டும் கட்டுரைகளைப் பலமுறை படித்து நான் பயன் அடைந்திருக்கிறேன்.

''வேதாந்தக் கலையைத் தமிழின் மூலம் விளக்க முடியுமா?'' என்று வினா எழுப்பப்பட்டது, முன்னொரு காலத்திலே! அதற்கு 'முடியும்' என்று செயல்மூலம் விடையளித்த பெருமை தமிழ்நாட்டிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடத்திற்கே உரிமையாகும். இதனை நினைவில் கொண்டால், ''ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்'' பத்திரிகை தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் தொண்டாற்றி வருவது புலனாகும்.

இந்தப் பத்திரிகையைத் தமிழ்மக்கள் ஆதரிக்க வேண்டும். குறிப்பாக, தெய்வபக்தர்களும் தேசபக்தர்களும் தவறாமல் வாங்க வேண்டும்.

—ம. பொ. சிவஞானம்
''செங்கோல்'' 30–10–77

வெளிநாடுகளுக்கு ஆண்டுச் சந்தா விவரம்: இலங்கை (இந்திய நாணய மதிப்பில்)—ரூ. 10 யு. எஸ். ஏ.—$ 4 பிற நாடுகள்—£ 2 **ஆயுள்சந்தா:** இலங்கை (இந்திய நாணய மதிப்பில்)—ரூ. 150 யு. எஸ். ஏ.—$ 70 பிறநாடுகள்—£ 25

தனிப் பிரதி வெளிநாடு ரூ. 2